161

# செந்தமிழ்
## வாசகம்



10 JUL 1957
MADRAS
592

படிவம் 2
சிறப்பு

ரமணியம் கம்பெனியார்
திண்டுக்கல்

TB
P31,J9(2)
N57
83529

# செந்தமிழ் வாசகம்

161/3-57

## இரண்டாம் படிவம்—சிறப்பு

ஆசிரியர் :
புலவர் க. கு. முத்தையா,
தலைமைத் தமிழாசிரியர்,
தூய மரியன்னையின் உயர்நிலைப் பள்ளி, திண்டுக்கல்.

[Paper used : 24 lbs. White Printing]

வி. சுப்ரமணியம் கம்பெனியார்
கல்வி நூல் பதிப்பாளர்கள்
திண்டுக்கல்

பதிப்புரிமை

1957

[விலை { அணு 10
ந. பை. 62

முதற் பதிப்பு—1956
இரண்டாம் பதிப்பு—மே, 1957

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Supplement to Part I-B of the
Fort St. George Gazette dated 10-4-1957, Page 19]

Kabeer Printing Works, Madras (3566)

# முன்னுரை

அரசாங்கக் கல்வி இலாகாவினர் 1951-ஆம் ஆண்டில் வெளியிட்ட புதிய பாடத்திட்டப்படி, இந் நூல்வரிசை எழுதப் பெற்றுள்ளது. ஒவ்வொரு படிவத்திற்கும் பொது, சிறப்பு என்ற இரு பிரிவு களின் கீழ் இலக்கியம், கலை, வரலாறு, நாடகம், விஞ்ஞானம் முதலிய துறைகளில் மாணவர்கள் நல்ல பயிற்சி யடையுமாறு பாடங்கள் இயற்றப் பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் கற்கும் மாண வர்க்கு ஏற்ற முறையில் பொருள்களும், மொழி நடையும் கையாளப்பட்டுள்ளன. பாடங்களின் இறுதியில் அருஞ்சொற்கள், எளிய விஞக்கள், மொழிப்பயிற்சி, இலக்கணப் பயிற்சி ஆகியவை இடம் பெற்றுள்ளன. மாணவர்களிடையே மொழிப் பற்றும், அறிவுத் திறனும் பெருக, இப்பாடங்களும் பயிற்சிகளும் பெரிதும் பயன்படுவன வாகும்.

மற்றும், செய்யுட் பகுதியில் வாழ்த்து, அறவுரை, கதை, பல்சுவைச் செய்யுட்கள் முதலி யன சேர்க்கப்பட்டுள்ளன. செய்யுட்களுக்கு அருஞ்சொற்பொருள்களும் தரப்பட்டிருக்கின்றன. ஆகையால், மாணவர்களின் கல்வியாற்றலை இந் நூல்கள் நன்கு வளர்க்கும் என்று நம்புகிறேன்.

இப்புத்தக வரிசை நல்லமுறையில் உருவாகப் பெரிதும் உதவிய சென்னை வித்வான் வே. இலட்சு மணன் அவர்களுக்கு என் நன்றி உரித்தாகுக.

ஆசிரியர்

# பொருளடக்கம்

## உரைநடைப் பகுதி


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | திரு. வி. கலியாண சுந்தரனர் | ... | 1 |
| 2. | சர்க்கரை | ... | 11 |
| 3. | பாரி வள்ளல் | ... | 18 |
| 4. | சிற்பக் கலை | ... | 26 |
| 5. | முத்தமிழ் | ... | 37 |
| 6. | வாணிகம் | ... | 45 |
| 7. | விநோபா பாவே | ... | 51 |
| 8. | விளையாட்டும் வினையும் | ... | 62 |

## செய்யுட் பகுதி


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| I. | வாழ்த்து | |
| | (1) பரம்பொருள் ... | 70 |
| | (2) இயேசுநாதர் ... | 70 |
| | (3) மகம்மது நபி ... | 71 |
| II. | அறவுரை | |
| | (1) நான்மணிக் கடிகை ... | 72 |
| | (2) ஆசாரக் கோவை ... | 72 |
| | (3) திருக்குறள் ... | 73 |
| III. | கதை | |
| | (1) பஞ்சதந்திரப் பாடல் ... | 75 |
| | (2) பாஞ்சாலி சபதம் ... | 77 |
| | (3) நைடதம் ... | 78 |
| IV. | பல்சுவைச் செய்யுட்கள் | |
| | (1) திருவேங்கட சதகம் ... | 80 |
| | (2) சிலேடைச் செய்யுள் ... | 80 |
| | (3) இயற்கை எழிற் காட்சி ... | 81 |
| | (4) புதுவழியும் தவமும் ... | 81 |
| | (5) உழவின் தேவை ... | 81 |

## நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா

விந்திய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே

காயே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே

# தேசீய கீதம்


இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி
செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில்
கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப்
பாடுகின்றன;
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி.

# செந்தமிழ் வாசகம்

## இரண்டாம் படிவம்—சிறப்பு



### 1. திரு. வி. கலியாண சுந்தரனுர்

தமிழ்நாடு செய்த தவப்பயனுய்த் தோன்றிய பேரறிவாளர் பலராவர்; மனம், மொழி, மெய் என்ற மூவகையானும் அறநெறி பேணி, அன்பிணைப் போற்றி வளர்த்த ஆன்ருேர்களும் பலராவர். அத்தகைய பெரியோர்களுள், இந்த இருபதாம் நூற்ருண்டில் விளங்கிய **திரு. வி. கலியாண சுந்தரனுரும்** சிறப்புக்குரிய ஒருவராவார்.

இப்பெரியார் தமிழ் மொழியின்கண் பேரார்வம் மிக்கவர்; தமிழ் மொழிப் புலமையில் தன்னிகரற்றவர்; சிறந்த பேராசிரியர்; திறமிக்க எழுத்தாளர்; எளியவரின் இன்னுயிர்த் தோழர்; இளைஞர்களின் நல்வாழ்வுக்கு வழி வகுத்த அறிஞர். இவர் தம் தூய வாழ்க்கை நெறியையும் வாழ்வின் வரலாற்றையும் மக்கள் அனைவரும் அறிதல் தலையாய கடனும்.

திரு. வி. கலியாண சுந்தரனுர் அவர்கள் தமிழகத்தின் நாற்றிசைகளிலும் தம் அறிவொளியைப் பரப்பிச் சீரும், சிறப்பும் பெற்றிருந்தார். தமிழ் மக்களின் உள்ளங்களில் நிலையான இடம் பெற்றுப் பொன்ருத புகழும், குன்ருத குணமும் கொண்டு வாழ்ந்த இவரைத் '**திரு. வி. க.**' என்னும் சுருக்கமான பெயரே சுட்டிக் காட்டலாயிற்று. மக்களின் பெருமதிப்பைப் பெற்ற பெரியார்கள் இயற்பெயராலன்றிச் சிறப்புப் பெயராற் குறிக்கப் படுதல் இயல்பே யன்றே? அங்ஙனம் திரு. வி. க. அவர்கள் 'தமிழ் முனிவர்' என்னும் புகழ் நாமத்தைத் தமக்குரியதாகக் கொண்டார்.

திரு. வி. க. என்னும் பெயரில் முதற்கண் உள்ள '**திரு**' என்னும் சொல் 'திருவாரூர்' என்ற ஊரைக் குறிக்கும் சுருக்கப் பெயராகும். '**வி**' என்பது இவரது தந்தையாராகிய **விருத்தாசல முதலியாரை** அறிவிக்கும் எழுத்தாகும். '**க**' என்பது கலியாணசுந்தர முதலியார் என்ற முழுப் பெயரின் முதலெழுத்தாகும். திரு. வி. க. அவர்களின் முன்னேர்கள் வாழ்ந்த திருப்பதி **திருவாரூர்** என்பது. ஆயினும், இவர் தோன்றிய இடமோ வேறு. செங்கற்பட்டு மாவட்டத்தைச் சார்ந்த

**துள்ளம்** என்னும் கிராமத்திலே இவர் பிறந்தார். விருத்தாசல முதலியார் அச்சிற்றூரில் மளிகைக் கடையொன்றை அமைத்து, அதன் வாயிலாகக் கிடைத்த சிறு ஊதியத்தைக் கொண்டு, குடும்பத்தை நடத்தி வந்தார். அவருடைய மனைவியார் **சின்னம்மையார்** எனப்படுவர். இவ்விருவரும் மனமொருமித்து, இல்லற வாழ்வு நடத்தி வந்தனர். இப் பெற்ருேர்களின் நற்பேற்ருல் திரு. வி. க. அவர்கள் கி. பி. 1883-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26-ஆம் நாள் இந்நிலவுலகில் தோன்றினுர். இவருக்கு உற்ற தமையனுராக விளங்கிய உலகநாத முதலியார், தம் அருமைத் தம்பியைப் பெரிதும் நேசித்தார். இவ்விருவரும் இளமை தொட்டே இணைபிரியாது வாழலாயினர்.

திரு. வி. க. அவர்கள் பிள்ளைப் பருவத்தில் உடலுறுதியும், மனவெழுச்சியும் மிகுந்து விளங்கினுர். துணிவுடைமையும், கூரிய மதிவன்மையும் இவருடைய இரு கண்கள் போல விளங்கின. தளர்ச்சியின்மையும், விடாமுயற்சியும் இவர்க்கு இயற்கையிலேயே அமைந்தன. விருத்தாசல முதலியார் தமது அருமை மகனின் இச்சீரிய பண்புகளைக் கண்டு, தமக்குள் பெரிதும் மகிழ்ந்தார்; மகனுக்குத் தந்தை ஆற்றவேண்டிய கல்விக் கடனையும் செம்மையுறச் செய்ய நினைத்தார்; இக்காரணத்தால் ‘ துள்ளம் ’ என்ற அச்சிற்றூரை விட்டு நீங்கிச் சென்னை நகரத்திற்குக் குடி மாறினுர். ஆங்கு இராயப்பேட்டையில் அவரது குடும்பம் அமையலாயிற்று. திரு. வி. க. அவர்களும் இராயப்பேட்டையிலுள்ள ‘ வெஸ்லி ’ பள்ளியில் கல்வி கற்கத் தொடங்கினுர். இங்கு ஆரும்

படிவம் வரையிலும் கற்றுச் சிறந்த மாணவர் என்னும் பெயரினைப் பெற்ருர்.

வெஸ்லி பள்ளியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **கதிரைவேற் பிள்ளை** யென்பார் தமிழாசிரியராக இருந்தார். இவர் தமிழிலக்கியக் கடலின் கரை கண்டு, சொல் வன்மையிலும், புலமையிலும் சிறந்து விளங்கினர். திரு. வி. க. அவர்கட்கு இவ்வாசிரியர்பால் மிக்க மதிப்பு ஏற்பட்டது. இளைஞர்களின் உள்ளக் கோவில்களில் திறமை மிக்க மேலோர்கள் குடிபுகுதல் இயற்கையன்ருே? அவ்வாறே திரு. வி. க. அவர்களின் நினைவு மாளிகையில் அவ்வாசிரியப் பெருந்தகையார் குடிபுகுந்தார். அப்பெரியாரைப் போலவே தாமும் சிறந்த மொழிப் புலவராக வேண்டும் என்னும் ஆர்வம் திரு. வி. க. அவர்களின் நெஞ்சில் ஆழப்பதிந்தது. அவரிடம் இவர் கற்ற தமிழ் நூல்கள் பல; அவர் வாயிலாக அறிந்த அறவுரைகளும் பலவாகும். இதனல் இவர் ஆசிரியரிடம் அளவிறந்த பற்றுக் கொண்டார். ஆரும் படிவத்தின் தகுதித் தேர்வின்போழ்து, குறித்த நாள் ஒன்றில் தேர்விற் கலந்துகொள்ள முடியாது போனமைக்கு, மேற்கூறிய ஆசிரியற்பாற் கொண்ட பற்றே காரணமாகும். அது எங்ஙனமெனில், ஆசிரியர்க்காக ஒரு வழக்கில் இவர் சான்று பகரவேண்டிய நிலை நேர்ந்தது. அவ்வழக்கும், தகுதித் தேர்வும், ஒரே நாளில், ஒரே நேரத்தில் நிகழ்ந்தன. திரு. வி. க. அவர்கள் ஆசிரியர்க்காகத் தேர்வில் கலந்து கொள்ளுதலைத் தவிர்த்து, வழக்கு மன்றம் நோக்கிச் சென்றுவிட்டார். என்னே இவரது ஆசிரிய வழிபாடு! என்னே இவர்தம் நன்றியுணர்ச்சி!

இக்காரணத்தால் அவ்வாண்டு, படிப்பில் வெற்றி யடைய இயலாது போயிற்று. படிப்புக்கும் அந் நிகழ்ச்சியுடன் ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது.

சில நாட்களுக்குப் பிறகு ஆசிரியர் கதிரை வேற்பிள்ளை அவர்கள் காலமாகிவிடவே, திரு. வி. க. அவர்கள் கலங்கரை விளக்கமறியா மாலு மியைப் போல் கலங்கலானுர். ஆயினும், ஆர்வ முடையோர்க்கு ஏதும் ஒரு நன்னெறி கண்முன் தோன்றுமல்லவா? புலவர் **தணிகாசல முதலி யார்** என்பவரைக் கண்டு, அவர்பால், திரு. வி. க. அவர்கள் தமது தமிழ் நூற் கல்வியை வளர்க்கத் தொடங்கினுர்; சைவ சாத்திரங்களையும் அறிந் தார்; கிறித்தவ சமயத்தின் உயரிய கருத்துக்களைத் தனிப் பயிற்சி வாயிலாக அறிந்தார். ஆங்கில மும் பல நூற் கல்வியால் வாய்க்கப் பெற்ருர். இவ்வாறு, பலவகை அறிவு நிலைகளும் நிரம்பிய உள்ளத் தெளிவு இவர்க்கு உண்டாயிற்று.

அறிவியல் துறைகளில் இவர் உள்ளம் சென்ற தெனினும், வாழ்வியற் கூறுகளும் தேவையா யிருந்தன. ஆகையால் திரு. வி. க. அவர்கள் முதலில் '**பின்னி**' கம்பெனியிலும், பின்னர் '**ஸ்பென்ஸர்**' கம்பெனியிலும் சில காலம் தொழி லாற்றினுர். இதன் பின்னர் ஓர் ஆரம்பப் பள்ளி யில் ஆசிரியப்பணி புரியலானுர். ஆறு ஆண்டு களுக்குப் பின், வெஸ்லி கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். மாணவர்களின் பெருமதிப்பைத் தமது அறிவாற் றல்களைக் கொண்டு திரட்டிய இப்பெரியார்க்கு அப்பணியில் இன்பம் பிறந்தது. ஆயினும் அக்

காலத்தில் இவர்க்குத் தாய்நாட்டின் விடுதலை இயக்கத்தில் கலந்து கொள்ளும் உணர்ச்சியே மேலிட்டெழுந்தது. அவ்வமயம் நாட்டின் பல் வேறு இடங்களிலும் தாய் நாட்டின் விடுதலை பற்றிய முழக்கங்களும், அவற்றிற்கான இயக்கங் களும் கிளைத்தன. இச்சீரிய பணியில் ஈடுபட விரும்பிய பெரியார், பேராசிரியர் பதவியைத் துறந்து, விடுதலை வேள்வியில் இறங்கினார். 1917-ல் இவர் '**தேசபக்தன்**' என்னும் தினசரி வெளியீட்டைத் துவக்கி நடத்தினார். பின்னர், **நவசக்தி** என்னும் வாரத்தாளை நடத்தலானார். இப்பத்திரிகைகள் நாட்டுப் பற்றுகிய கனலை எழுப்பின ; மக்களிடையே படிந்திருந்த அறி யாமை யென்னும் இருளை அகற்றின ; காந்தியடி களின் சத்தியாக்கிரக இயக்கத்தையும், ஒத்துழை யாமை இயக்கத்தையும் தமிழ்நாட்டு மக்களிடையே தெளிவுற எடுத்துக் கூறி, உரிமை வேட்கையைத் தூண்டிவிட்டன.

திரு. வி. க. அவர்கள் மேற்கூறிய முயற்சியில் ஈடுபட்ட காலத்தில் காலாம்பிகை என்னும் அம்மையாரைத் திருமணம் புரிந்துகொண்டார். இல்லற வாழ்க்கை ஆறுண்டுகளே நடந்தது. அதன்பின் அவ்வம்மையார் இறந்துவிட்டார். அவர் ஈன்ற இரு குழந்தைகளும், பிறந்த சில காலத்திற்குள்ளாகவே உலகைப் பிரிந்து ஏகிவிட் டன. இக் கடுஞ் சோதனைகளுக் கெல்லாம் ஈடு கொடுத்த திரு. வி. க. அவர்கள், துயரத்திற்கு எல்லை கண்டு, அதற்காக மனஞ் சலியாதவராயி னார். இல்லறத் துணைவியார் மறைந்தபின், இவர் மறுமணம் செய்துகொண்டாரில்லை; மக்களுக்கு

அறவுரை புகட்டி, நன்னெறி காட்டும் பணியே தம் வாழ்நாளைய குறிக்கோளாகக் கொண்டு இலங்கினுர்.

நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படையான தொழில்களைப் புரியும் தொழிலாளர்கள் திரு. வி. க. அவர்களின் சிந்தனைக்குரியவர் ஆயினர். தொழிலாளர்களின் வறிய நிலை இவரது நெஞ்சை வருத்திற்று. ஆகையால், '**சென்னைத் தொழிலாளர் சங்கம்**' என்பதைத் தோற்றுவித்து, உழைப்பாளர்களின் நன்மைகளுக்கான பல திட்டங்களை வகுத்தார். அரசியலாருடன் இம்முயற்சியில் இவர் நிகழ்த்திய போராட்டங்கள் பல. அவற்றின் விளைவைக் கண்டு அஞ்சிய ஆங்கில அரசியலார் ஒரு சமயம் தொழிலாளர்கள் பலரைச் சுட்டுக் கொன்றனர். திரு. வி. க. அவர்கள் எதிர்த்துப் போராடினுர். இவர்மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவரை நாடு கடத்தும் உத்தரவும் பிறந்தது. ஆயினும், இவர் சிறிதும் தம் முயற்சியில் பின்வாங்கினுரில்லை. இறுதியில் அந்த உத்தரவு நீக்கப்பெற்றது.

இவ்வாறு நாட்டுத் தொண்டுகளில் ஆழ்ந்த இவர், தமிழ்மொழி வளர்த்தலைச் சிறிதும் கைவிட்டு விடவில்லை. இவர் இயற்றிய நூல்கள் ஏறக்குறைய ஐம்பது இருக்கக்கூடும். **முருகன் அல்லது அழகு, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், இளமை விருந்து, உள்ளொளி, பெண்ணின் பெருமை** முதலிய உரைநடை நூல்கள் மிக்க புகழ்பெற்றவை. அழகு மிக்க செந்தமிழ் நடையில் இந்நூல்கள் அமைந்துள்ளன. **முருகன் அருள் வேட்டல், திருமால் அருள் வேட்டல்** முதலிய கவிதை நூல்

களும் இவரால் இயற்றப்பட்டன. அவை இலக்கண வரம்புகளும், இலக்கிய நயங்களும் கொண்டவை. இவர் ஆற்றிய பேருரைகளின் தொகுப்புக்குத் '**தமிழ்த் தென்றல்**' என்னும் பெயர் சூட்டப்பட்டுள்ளது. சுருங்கச் சொல்லின், இவரால் எடுத்தோதப்படாத சிறந்த பொருள் ஏதுமில்லையென்று கூறுதல் தகும்.

திரு. வி. க. அவர்கள் எளியகுடியில் தோன்றினர். ஆயினும் 'தன்முயற்சி'யால் '**தமிழகத்தின் தந்தை**' யென்ற பெரும்பெயர் எய்தினர். இச்சிறப்பிற்கு அடிப்படையாக அமைந்த தன்மைகள் பல. அன்பு, அடக்கம், தன்னலங்கருதாச் சிறப்பு, அஞ்சாமை, ஆராயும் மதிநுட்பம் முதலானவைகளே அவை. இவற்றின் ஆற்றலைக்கொண்டே இவர், மற்றையோர் அடைதற்கரிய பெரு நிலையை அடைந்தார். '**சமரச சன்மார்க்கம்**' எனப்படும் தூய நெறியே இவர் வாழ்க்கையில் அமைத்துக் கொண்ட வழியாகும். இத்தன்மையால் சமயச் சீர்திருத்தங்களிலும் இவர் தலைமை தாங்கி நின்றார்.

இவ்வாறு பிறருக்கெனவே வாழ்ந்து, தனக்கென ஏதும் கொள்ளாது, பணி செய்தலே நோக்கமாக விளங்கிய இத்துறவியார் 17-9-1953 என்னும் நாளில் காலமானர். இச்செய்தியறிந்த நாடு முழுவதும் துயரத்தில் மூழ்கிற்று. "**ஈடு செய்ய முடியாத பெருங் குறை**" என்று நாற்றிசைகளிலிருந்தும் குரல்கள் ஒலித்தன.

பெரியோர் உலகில் தோன்றுதல் ஒரு பெருஞ் செயல் முடித்தற்கேயாகும். அங்ஙனம் பெருஞ் செயல்களான பலவற்றை இனிது முடித்த இப்

பெரியார், இறுதி நிலையை அடைந்தபோதிலும், இந்நாட்டு மக்களின் நெஞ்சங்களில் இன்றும் தோன்றி வாழ்கிறார் என்பது உறுதி.

## பயிற்சி

1. பொருள் காண்க :

ஆன்றோர், தலையாய, பொன்றாத, குன்றாத, திருப்பதி, ஒருமித்து, மனவெழுச்சி, யாழ்ப்பாணம், தகுதித்தேர்வு, சான்று, வழக்கு மன்றம், உரிமை வேட்கை, நடவடிக்கை.

2. விடை கூறுக :

1. திரு. வி. க. அவர்களின் சிறந்த தன்மைகள் யாவை ?
2. 'திரு. வி. க.' என்ற பெயரின் விளக்கம் யாது ?
3. திரு. வி. க. அவர்களின் நினைவு மாளிகையில் குடி புகுந்தவர் யார் ? அவருடைய சிறப்பியல்கள் யாவை ?
4. கலியாண சுந்தரனார் தகுதித் தேர்வில் கலந்து கொள்ளாதது ஏன் ?
5. இவரது கல்வியறிவு எங்ஙனம் பெருகிற்று ?
6. திரு. வி. க. ஆற்றிய தொழில்கள் யாவை ?
7. இவர் 'பேராசிரியர்' பதவியைத் துறந்தது ஏன் ?
8. இவரால் நடத்தப்பட்ட பத்திரிகைகளின் பெயர்கள் என்ன ?
9. தொழிலாளர்களுக்குத் திரு. வி. க. செய்த நன்மைகள் யாவை ?
10. திரு. வி. க. இயற்றிய உரைநடை நூல்கள் என்னென்ன ?
11. 'தமிழ்த் தென்றல்' என்று எதற்குப் பெயர் சூட்டப் பட்டது ?

3. பிரித்து எழுதுக :

தவப்பயன், பேரார்வம், நாற்றிசை, நற்பேறு, நூற்கல்வி.

4. சேர்த்து எழுதுக :

மூன்று + வகை இனிமை + உயிர்
துணிவு + உடைமை நன்மை + நெறி
உள்ளம் + தெளிவு.

5. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

அறிவியல், வாயிலாக, மேலிட்டு, பெருங்குறை.

6. கட்டுரைப் பயிற்சி :

திரு. வி. க. அவர்கள் இயற்றிய நூல்களைப்பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுதுக.

## இலக்கணம்

தமிழ்ச் சொற்கள் இடத்திற்கும், காலத்திற்கும் ஏற்றவாறு மாறுபட்டு 'வழக்கில் வந்தன. அவ்வாறு வழங்கும் தமிழ்ச் சொற்களைச் செந்தமிழ், கொடுந்தமிழ் என்று இரண்டு பிரிவுகளுக்குட்படுத்தினர். செந்தமிழ் என்பது கொச்சையும் பிழையுமற்ற தூய தமிழ்ச் சொற்களைக் கொண்டதாகும். கொடுந்தமிழ் என்பது கொச்சைச் சொற்களையும், பிழைச் சொற்களையும் கொண்டதாம்.

'ஆயிற்று' என்னும் சொல்லை 'ஆச்சு' என்றும் 'போயிற்று' என்னும் சொல்லைப் 'போச்சு' என்றும் கொச்சையாகப் பேசுதலை நாம் கேட்டிருக்கிறோம். 'ஆயிற்று, போயிற்று' என்பவையே செந்தமிழ்ச் சொற்களாம். 'ஆச்சு, போச்சு' என்பவை கொடுந்தமிழ்ச் சொற்களேயாகும். கீழே சில செந்தமிழ்ச் சொற்கள் கொடுந்தமிழ்ச் சொற்களாய்ச் சிதைந் திருத்தலைக் காண்க.

| செந்தமிழ் | கொடுந்தமிழ் |
|---|---|
| நிரம்பவும் | ரொம்பவும் |
| பன்றி | பன்னி |
| நன்செய் | நஞ்சை |
| புடைவை | புடவை |
| ஆண்பிள்ளை | ஆம்பிளை |
| அகத்திற்கு | ஆத்துக்கு |
| ஒன்றியாய் | ஒண்டியாய் |

இவ்வாறு மாறும் கொடுந்தமிழ்ச் சொற்களை அமைத்து எழுதுதல் தவறு. ஆதலின் இவற்றை நாம் நீக்கிவிடவேண்டும்.

## 2. சர்க்கரை

உடலுக்கு உறுதி தரும் உணவுப் பொருள்கள் பலவாம். அவற்றுள் சர்க்கரையும் ஒன்று. இனிப்புச் சுவை மிக்க இப்பொருள் ஒரு செயற்கைப் பொருளேயன்றி, இயற்கைப் பொருள் அன்று. இயற்கை நமக்களிக்கும் தாவரங்களிலிருந்து பலவகைச் செயற்கைப் பண்டங்கள் செய்யப்படுகின்றன. அவ்வாறே சர்க்கரையும் **கரும்பு**, '**பீட்**' என்னும் கிழங்கு ஆகியவற்றிலிருந்து எடுக்கப்படுகிறது. வேறு சில தாவரங்களும் சர்க்கரையெடுக்கப் பயன்படுதல் உண்டு. ஆயினும் அவற்றிலிருந்து மிகக் குறைந்த அளவுள்ள சர்க்கரையே கிடைப்பதால், அவற்றை விரும்பிப் பயிர் செய்வதில்லை. கரும்பையும், 'பீட்' என்னும் கிழங்கையுமே பெரிதும் பயிர் செய்து, இந்த இன்சுவைப் பொருளை உற்பத்தி செய்கின்றனர்.


கரும்புப் பயிர் நன்செய் வகையைச் சேர்ந்ததாகும். நல்ல வெப்ப நிலையுள்ள நாடுகளிலேயே இப்பயிர் செழித்து வளரும். ஆதலின் இதனை 'வெப்ப மண்டலத்துப் பயிர்' என்பர். நம் இந்திய நாடு வெப்ப மண்டலத்தைச் சார்ந்தது. ஆகையால் இந்நாட்டில் கரும்புப் பயிர்வளம் மிகுதியாகவுள்ளது. மற்றும் கிழக்கிந்தியத் தீவுகள் போன்ற சில இடங்களிலும் இப்பயிர் நன்கு வளர்கிறது. கரும்பு நீர்வளம் நாடும்; நிலவளத்தையும் எதிர்பார்க்கும்; வானோக்கி நின்று, மழையின் வரவைத் தேடும். போதுமான மழை

பொழிந்தால் இப்பயிர் நன்கு வளர்ந்து, சர்க்கரை யுற்பத்திக்குப் பாங்கான கழிகளை விளைவிக்கும்.

கரும்பு ஒரு நன்செய்ப் பயிரென்று முன்னமே கூறப்பட்டது. ஆகையால் குடியானவர் நிலத்தில் பாடுபட்டால், நல்ல ஊதியம் கிடைக்கப் பெறுவர் என்பது உறுதி. நிலத்தில் கரும்புத் துண்டுகளை நட்டு, இப்பயிரை வளர்த்தல் முறை. நடப்படும் துண்டுகள் சிறியவையாகவும், ஒன்றிரண்டு கணுக்கள் மண்ணுக்குமேல் தெரிவனவாகவும் இருக்கும். பாத்திகளில் வாரத்திற்கு இருமுறை, தவருது நீர் பாய்ச்ச வேண்டும். இவ்வாறு செய்துவரின் கணுக்களில் தளிர்கள் காணப்படும். பின்னர் சிறிது சிறிதாய் வளர்ந்து, பத்து அல்லது பன்னிரண்டு அடிவரை உயர்ந்து வளரும். கரும்பின் தோகைகள் கூரியவையாயும், தருப்பைப் புற்களைப்போல் அறுக்கக் கூடியவையாயும் அமைந்திருக்கும். இப்பயிர் நன்கு முற்றிச் சாறு மிகுந்து வளர ஓராண்டு வரை காலம் பிடிக்கும். அக்காலவரையறைக்குப் பின்னரே, கருப்பங் கழிகளை வெட்டியெடுத்தல் முறையாகும்.

கருப்பங் கழிகளை வெட்டியதும், தழைகளைக் கழித்து விட்டுக் கழிகளை மட்டும் எடுத்துச் செல்வர். பின் அக்கழிகள் சிறு துண்டுகளாக நறுக்கப்படும். நறுக்கிய சிறு துண்டுகளை ஆலைச் சக்கரத்திற் கொடுத்துச் சாறு வேறு, சக்கை வேருகப் பிரித்தெடுப்பர். சாறு விழுவதற்குத் தனியாக ஓர் அகன்ற பாத்திரம் வைக்கப்பட்டிருக்கும். நசுக்கப்பட்ட கரும்புத் துண்டுகளிலிருந்து பெருகும் சாறு, குழாய் வழியாக அப்பாத்திரத்தை அடையும். பின்னர் அச்சாற்றினை

வடிகட்டித் தூய்மைப் படுத்துவார்கள். தூய்மை யெய்திய சாற்றைப் பெரிய மிடாவில் ஊற்றிக் காய்ச்சுவர். அங்ஙனம் காய்ச்சும்போது, சாற் றின் நீர் ஆவியாக மாறி, இனிப்புப் பொருள் மட்டும் கீழே தங்கும். அப்பொருளை இளக்கி யெடுத்துச் சுண்ணும்பு நீருடன் கலந்து வடிகட்



டுவர். அதனுல் அப்பொருளிற் கலந்திருந்த அசுத்தப் பொருள்கள் சுண்ணும்பு நீருடன் கலந்துகொண்டு மேலே தங்கும். கீழே வடிந் திருக்கும் சர்க்கரை நீரை மீண்டும் காய்ச்சினுல், நீர் ஆவியாகித் திடப் பொருளான சர்க்கரை தனித்து நிற்கும். இதனையே சர்க்கரைப் பாகு என்பர். பாகினைப் பெரிய தட்டுக்களில் பரப்பி வைத்து உலர்த்துவார்கள். இதுவே சர்க்கரை யாகும்.

இச் சர்க்கரை நாம் கடைகளில் வாங்கும் சர்க் கரைபோல் தூய வெண்மையாயிராது. ஆகை யால் உலர்த்தி யெடுத்த சர்க்கரை மீண்டுமொரு முறை காய்ச்சப்படும். இவ்வாறு காய்ச்சப்படு முன், சர்க்கரையை நீருடன் கலந்து, நீராக மாற்

றுவர். எலும்புத்தூள்களை அதனுடன் சேர்த்து வடிகட்டுவர். வடிகட்டி இறக்கப்பட்ட அந்த இனிப்பு நீரைக் காய்ச்சியே, வெண்மைமிக்க சர்க்கரையைத் தயாரிப்பர். சர்க்கரைப் பாகிலிருந்து வெல்லந் தயாரித்தலும் உண்டு. பாகைக் கட்டியாக்கி, அதை மரத்தாலான அச்சுக்களில் ஊற்றினால், அது அச்சு வெல்லத் துண்டுகளாக மாறிவிடும்.

இனி 'பீட்' என்னும் கிழங்குகளிலிருந்து சர்க்கரை யெடுக்கும் முறையைக் காண்போம். பீட்டுக் கிழங்குகள் மிதமான தட்பவெப்ப நிலையுள்ள நாடுகளிலேயே அதிகம் பயிராவன ஆகும். அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், ஜெர்மனி நாட்டிலும் பீட்டு உற்பத்தியும், சர்க்கரைத் தயாரிப்பும் அதிகமாயுள்ளன. இந்நாடுகளில் பீட்டுக் கிழங்குகளைச் சின்னஞ்சிறு துண்டுகளாக வெட்டி, கொதிக்கும் வெந்நீர்ப் பாத்திரங்களில் போடுவர். பின்னர், பாத்திரங்களின் மூடிகளை மூடிவிடுவர். இப்பாத்திரங்களுள் கிழங்குகளின் இனிப்புச் சாறு வெந்நீரில் இறங்கும். சாறு முழுமையும் இறங்கிய பின்னர் அதனை வடிகட்டிக் காய்ச்சி, கரும்புச் சர்க்கரை தயாரித்தலைப் போலவே தயாரிப்பர். பீட்டுக் கிழங்குகளின் சாறு அதிக அளவுள்ள அசுத்தப் பொருள்களோடு கலந்திருத்தல் இயல்பு. ஆகையால் நன்கு சுத்தம் செய்த பின்னரே, இச்சர்க்கரையைப் பயன்படுத்துவார்கள்.

நம் நாட்டில் கரும்பாலைகள் ஏராளமாக உள்ளன. கருப்பங்கொல்லைகளிலேயே ஆலைகளை அமைத்துச் சர்க்கரைத் தொழிலை ஆற்றுவார்கள். பெரிய எந்திர ஆலைகளைக் கொண்டும் சர்க்கரைத்

தொழில் நடத்தல் உண்டு. தென்னுட்டில் நெல்லிக் குப்பம், புகலூர் என்னுமிடங்களில் எந்திர ஆலை கள் உள்ளன. இக்காலத்தில் மற்றும் பல இடங் களில் இவ்வகை ஆலைகளை அமைத்து வருகின் றனர். எந்திர ஆலைகளின் வாயிலாக அதிக அளவு சர்க்கரை உண்டாக்கப்படுவது இயல்பே. ஆயி னும் கிராமத்தினர் தம் கைத்தொழில் ஆலைகளைக் கைவிடாது சர்க்கரை யெடுத்தலை மேற்கொண் டால்தான், கிராம முன்னேற்றம் பெருகக்கூடும்; கிராமப் பொருளாதார நிலையும் பெருகும்.

நம் நாட்டு மக்கள் மிகப் பழங்காலத்தி லிருந்தே கரும்புப் பயிரை அறிந்திருந்தனர் என்று இலக்கியங்களிலிருந்து அறியப்படுகிறது. கரும்புக்குரிய எந்திர அமைப்புப் பற்றிய குறிப்பும் இலக்கியத்தில் காணப்படுவதால், தமிழ் நாட்டின் பண்டைத் தொழில்களுள் இதுவும் ஒன்றென்பது தெற்றெனப் புலப்படுவதாகும்.

சர்க்கரையில் உடல் வளர்ச்சிக்கான ஆற்றல் உள்ளதென்று, உடற் கூறுகளையுணர்ந்த வல்லுநர் கள் கூறுகின்றனர். ஆதலின் இயற்கை வளமிக்க இந் நாட்டு மக்கள் கரும்புப் பயிரையும், சர்க் கரைத் தொழிலையும் அதிக அளவில் பெருக்கித் தமக்கும், தம்மையடுத்தவர்க்கும் பெரும் பயனளிப் பார்கள் என்று நம்புகிருேம். பொங்கல் திரு நாளில் கதிரவனுக்குப் படைக்கப்படும் கரும்பும், சர்க்கரைப் பொங்கலும் இந்நாட்டு மக்களின் உழைப்புக்குக் கிடைத்த ஊதியமான சின்னங்கள் அல்லவா? நாடு முன்னேற வேண்டுமாயின் பயிர் வளமும், செயல் வளமும் பெருக வேண்டும். இவ் வுண்மையை யறிந்து, உழைப்பாளர்களாகப் பணி

யாற்றி, உயரிய இன்பத்தை எய்துதல் மனிதரின் கடமையென்றே சொல்லவேண்டும்.

## பயிற்சி

**1. பொருள் காண்க :**

மண்டலம், கணுக்கள், தளிர், கூரியவை, சாறு, வரையறை, கழித்து, மிடா, திடப்பொருள், அச்சுக்கள், தட்ப வெப்பநிலை, குறிப்பு.

**2. விடை கூறுக :**

1. சர்க்கரை தயாரிக்கப் பயன்படும் பயிர்கள் எவை?
2. கரும்புப் பயிர் எவ்வகை நாடுகளில் நன்கு பயிராகும்?
3. கரும்புப் பயிரை வளர்க்கும் முறை யாது?
4. கரும்பு முற்றி வளர எவ்வளவு காலம் பிடிக்கும்?
5. சர்க்கரை தயாரிக்கக் கருப்பங் கழிகளை என்ன செய்வர்?
6. வெண்மை மிக்க சர்க்கரை தயாரிக்கப்படுவது எப்படி?
7. 'பீட்' என்பது என்ன? அதிலிருந்து எடுக்கப்படுவது யாது?
8. தென்னாட்டில் எந்திர ஆலை எங்கே இருக்கிறது?
9. நம்நாட்டு மக்கள் பழங்காலத்திலேயே கரும்புப் பயிரை அறிந்திருந்தனர் என்பதற்குச் சான்றுகள் யாவை?
10. சர்க்கரையினால் உண்டாகும் நன்மை யாது?

**3. பிரித்து எழுதுக :**

உணவுப் பொருள், இந்நாடு, ஓராண்டு, பிரித்தெடுப்பர், பெரும்பயன்.

**4. சேர்த்து எழுதுக :**

| | |
|---|---|
| தட்பம் + வெப்பம் + நிலை | கரும்பு + ஆலை |
| கை + தொழில் | பணி + ஆற்றி |

**5. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :**

செயற்கை, இன்சுவை, உறுதி, மீண்டும், பயன்படுத்து.

**6. கட்டுரைப் பயிற்சி :**

1. கரும்புச் சாகுபடி செய்யும் முறை பற்றிப் பத்து வாக்கியங்களை எழுது.

2. 'சர்க்கரை தயாரித்தல்' என்னும் தலைப்பின்கீழ்ப் பதினைந்து வாக்கியங்கள் எழுதுக.

**7. தெரிந்துகொள் :**

'கரும்பு'க்கு வேறு பெயர்களும் உண்டு. கன்னல், கழை, வேழம் முதலியன 'கரும்பு' எனப் பொருள் படும். இவற்றிற்கு 'ஒரு பொருட் பன்மொழி' என்று பெயர்.

## இலக்கணம்

சொற்களை வழங்கும்போது, முன்னோர் வழங்கிய முறையை மாற்றுதல் கூடாது. முன்னோர் வழங்கிய முறை போலவே சொற்களைச் சொல்வதற்கு 'மரபு' என்று பெயர்.

'கரும்புத் தோகைகள்' என்று சொல்வது மரபு. இதனையே 'கரும்பு இலைகள்' என்று சொல்வது மரபு வழுவாகும்.

'தென்னம்பிள்ளை' என்பது மரபு; தென்னஞ்செடி என்பது மரபுவழு.

'வழு' என்றால் குற்றமென்று பொருளாகும். கீழே சில மரபுச் சொற்களையும், மரபு வழுச் சொற்களையும் காண்க :

| மரபு | | மரபுவழு |
|---|---|---|
| மீன் குஞ்சு | — | மீன் குட்டி |
| யானைக் கன்று | — | யானைக் குட்டி |
| ஒருத்தி | — | ஒருவள் |
| ஆட்டு மந்தை | — | ஆட்டுக்குழு |

**பின்கண்ட சில வழு வகைகளை அறிக :**

| | | |
|---|---|---|
| அவன் பாடினாள் | — | இது பால்வழு |
| அவன் வந்தாய் | — | இது இடவழு |
| நான் நாளை வந்தேன் | — | இது காலவழு |
| ஆட்டுப் பாகன் | — | இது மரபுவழு |

## 3. பாரி வள்ளல்

அறிவு சான்ற புலவர் பலரால் புகழப் பெற்ற வண்மையோன் **பாரி** என்பவன். இவ்வள்ளல் பாண்டி நாட்டின் வடபால் உள்ள பறம்பு மலை நாட்டை ஆண்ட குறுநில மன்னன் ஆவான். பறம்புமலையென்பது இக்காலத்தில் **பிரான்மலை** யென்றும் **பாம்புமலை** என்றும் வழங்கப்படுகிறது. இம்மலையையும், இதைச் சார்ந்த முந்நூறு ஊர் களையும் பாரி ஆண்டனன். ஏறக்குறைய இரண் டாயிரம் ஆண்டுகட்குமுன் ஆட்சி புரிந்த இத் தூயோன் வலிமை மிக்க வீரனாகவும், வரையாத வண்மையுடையோனாகவும் விளங்கினான்; மறங் கெடுத்து அறமியற்றுதலையே தன் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டான்; குடிமக்களின் நலனை நாடுவதோடன்றி, வாழும் விலங்குகள், பயி ராகும் தாவரங்கள் ஆகியவற்றின் நலன்களையும் நாடினான். இவ்வகையியல்புகளால், இவனுக்குப் பெரும்பெயர் உண்டாயிற்று.

ஒரு சமயம் பாரி வள்ளல் காட்டின்கண் தனி யாகத் தேரிவர்ந்து சென்றபோது, அங்கு ஒரு முல்லைக் கொடியைக் கண்டான். அது காற்றினால் அலைப்புண்டு அசைந்து கொண்டிருந்தது. கொடி களுக்குப் பற்றுக்கோடு கொழுகொம்பு அல்லவா? கொழுகொம்பில்லாது அக்கொடி வாடிவருந்திற்று; படர்வதற்கு வழியின்றித் தவித்தது. இந்நிலை யைக் கண்ட பாரியின் உள்ளம் இரங்கிற்று. “அந்தோ! மணம் வீசிப் பிறரை மகிழ்விக்கும் பெற்றி வாய்ந்த இக்கொடி, துணையின்றி நலிகின் றதே!” என்று வருந்தித் தனது தேரினின்று

கீழிறங்கினன். அப்போது அவன் மனத்துள் ஓர் எண்ணம் தோன்றிற்று. "இக்கொடி படர்வதற்கென இத்தேரினையே நிறுத்திச் சென்றால் என்ன?" என்று அவன் மனம் எடுத்துரைக்கவே, உடனே தேரினைக் கொடியின் அண்மையில் நிறுத்தினன். அத்தேரையே கொடி தனது பற்றுக் கோடாகக் கொள்ளுமாறு செய்து, அங்கிருந்து கால்நடையாக மாளிகைக்குச் சென்றன். இச் செயலை அறிந்த மாந்தர் '**முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி**' என்று போற்றலாயினர். நள்ளி, பேகன், ஆய், அதிகமான், ஓரி, காரி என்னும் ஏனைய வள்ளல்களுக்கு இவனே முதல்வனுய்க் கருதப்பட்டு, இவனது பெயரும் போற்றப்பட்டது.

பாரியின் நாடு அக்காலத்தில் மிக்க செழிப்புற்று விளங்கிற்று. பறம்பு மலையிலிருந்து 'வெதிர்' எனப்படும் மூங்கிலின் நெல்லையும், இனிய சுளைகள் நிறைந்த பலாப்பழங்களையும், வள்ளிக்கிழங்கையும், தேனையும் மக்கள் அதிக அளவிற் பெற்றனர். அம்மலையின் வானளாவிய உயரமும், அதன்கண் உள்ள சுனைகளும், அருவிகளும், பகைவர் கடத்தற்கரிய அரண்களும், அவனது நாட்டுக்குப் பெருமை பயந்தன. நீர் நிறைந்த ஊருணி எவ்வாறு கற்றூர்க்கும், கல்லாதார்க்கும், செல்வர்க்கும், வறியர்க்கும் ஒரு நிலையாய்ப் பயனளிக்குமோ, அவ்வாறு பறம்புமலை நாட்டுச் செல்வமும் அனைவர்க்கும் பயன்பட்டது. ஆங்குள்ள முந்நூறு ஊர்களும் பரிசிலர்க்குரியவையாயின. பாரியோ, பரிசிலரின் வாடாத பாமாலையையும், பாராட்டையுமே தனக்குரிய செல்வமாகக் கொண்டான்.

இத்தகைய சிறப்புற்ற பறம்புமலைத் தலைவனைப் பற்றிக் கேள்வியுற்ற கபிலர் என்னும் புலவர், ஆங்கு வந்து மன்னனோடு நட்புக் கிழமை பூண்டார்; பாரி வள்ளலும் அப் புலவரின் கவி மாரியை அளவிலாது சுவைத்து, அன்னாரைத் தன் இன்னுயிர்ச் செல்வராகப் போற்றித் தன்னுடனேயே இருத்திக் கொண்டான். இவ்வாறு இருக்கும் நாட்களில், ஒரு சமயம் சேர, சோழ, பாண்டியர் என்னும் முடியுடை மன்னர் மூவரும் பாரியின் பெரும் புகழ் கேட்டு விம்மினர்; அழுக்காறுற்றனர். பறம்பு மலையைத் தமக்குரிய நாடாகப் பற்றிக் கொள்ள அவாக் கொண்டனர்; அவ்வாறே பறம்பு மலையைப் படைகளால் சூழச் செய்து முற்றுகை யிட்டனர்.

பல நாட்கள் முற்றுகை நீடித்த போதும், அவர்களால் மலையைக் கைப்பற்ற இயலவில்லை. பாரியோ முடிவேந்தரின் பொறாமைச் செயலை யறிந்து அஞ்சினன் இலன்; போர்வீரர்களையெல்லாம் ஒருங்கு திரட்டினன்; மூவேந்தரும் கோட்டைக்குள் புகாதவாறு எதிர்த்து நின்றான். நெடுங் காலம் நிகழ்ந்த இச் செயலால், உள்நாட்டினர் வெளியிற் சென்றுவர இயலாது போயிற்று; தேவையான பலவகை உணவுப் பொருள்களைக் கொணரவும் இடமில்லாமற் போயிற்று. ஆயினும் பாரியும், அந்நாட்டு மக்களும் மனந் தளர்ந்தார் இலர். மலையிற் கிடைத்த நெல், பலாப்பழம், கிழங்கு, தேன் ஆகியவற்றையே உண்டு வாழ்ந்தனர். மேலும் கபிலரால் வளர்க்கப்பட்டு வந்த கிள்ளைகளும் புருக்களும் கூட்டங் கூட்டமாகப் பறந்து சென்று, முற்றுகையைக் கடந்து, பல்

வகைத் தானியக் கதிர்களைக் கொணர்ந்து குவித்தன. இதனாலும் உள் நாட்டில் உணவுக் குறைபாடு இல்லாது போயிற்று. மூவேந்தரும் முற்றுகையிற் பலகாலம் ஈடுபட்டும், பயனொன்றும் பெறுதவராய் மனந்தளர்ந்தனர். பாரி தம்மைச் சரண்புகுவான் என்று அவர்கள் கருதியது ஏமாற்றத்திலேயே முடிந்தது.

இத்தருணத்தில் கபிலர் பெருமான் மதில்மேல் நின்று மூவேந்தரையும் நோக்கி, "முடிவேந்தர்களே! நீங்கள் எத்துணைக் காலம் முற்றுகையிடினும் இந் நாட்டைப் பிடிக்க வியலாது. இயற்கை யரண்கள் சூழ்ந்த எங்கள் நாடு பகைவர் புகுவதற்கு அரியது; உள்நாட்டில் உணவுப் பஞ்சம் தலைகாட்டாதவாறு, பலவகைப் பயிர்வளம் மிகுந்தது. ஆதலால், நீங்கள் வாள் வலியாலும், தோள்வலியாலும் எமது மன்னனை வெற்றிகொள்ள வியலாது. படைக்கு அஞ்சான் பாரி; பாணர் தம் இசைக்கே யடங்குவான். உங்களுக்கு இம்மலையை அடையும் அவா இருப்பின், பாணர்களாக மாறுங்கள்! யாழை இசைத்தவாறு, பாரியை அணுகுங்கள்! இன்சுவைப் பாடல்களைப் பருகும் பாரி, இம்மலையை உங்களுக்குப் பரிசாகக் கொடுப்பான். இதனையன்றி வேறு வழியில்லை," என்று மிக்க பெருமிதத்துடன் கூறினார். மூவேந்தரும் கபிலரின் அச் சொல்லம்புகளால் தாக்கப்பட்டு, வெட்கித் தலை குனிந்தனர். ஆயினும், அன்னவரின் சீற்றம் தணியவில்லை. கடுஞ் சினத்துடன் அரண்களைக் கடுமையாகத் தாக்கினர். தக்க தருணத்தில், படையுடன் வெளி வந்த பாரி, மூவேந்தருடன் போர் புரிந்து, வெற்றி

பெற்றான். மூவேந்தரும், அவர் தம் படைகளும் சிதறியோடவே நேர்ந்தது.

சிதறியோடிய மூவேந்தரும் ஒன்று கூடித் தமக்குள் ஆலோசித்தனர்; 'பாரியை வஞ்சனை யாற் கொன்று விடுதலே நடக்கக் கூடிய செயல்' என்ற முடிவுக்கு வந்தனர். அற்வாறே செயல் புரியவும் திட்டமிட்டு, மூவேந்தரும் முதுபுலவர் போல் பாரியிடம் வந்தனர். பாரி, அப்போலிப் புலவர்களின் தீய நோக்கத்தை அறியாது, அவர் தம் புகழ்க் கவிதைகளைக் கேட்டு மகிழ்ந்தான். அவர்கள் எப்பரிசு வேண்டினாலும், அதனைத் தருவதாக வாக்களித்தான். இதைப் பயன்படுத்திக் கொண்டு மூவேந்தரும் பாரியின் உயிரையே பரிசாகக் கேட்டனர். சொல் மாறாத் தூய்மை மிக்க வள்ளல், அப்பகைவர்க்குத் தன்னையே பரிசளித்தான். புறாவின் துயர் நீக்கப் பருந்திடம் தன் உடலையே கொடுக்க முன்வந்த சிபி மன்னனைப் போல், பாரியும் தன்னை ஈந்தான். ஆயினும், பருந்துக்கு இருந்த பெருந் தன்மை இம் முடிவேந்தர்க்கு அமையாமற் போயிற்று; பாரியைக் கொன்று தம் எண்ணத்தை முடித்துக் கொண்டனர். வஞ்சனைக்கு இரையான பாரி மன்னனைப் பிரிந்த பின், கபிலர் இந் நிலவுலகில் வாழ விரும்பினார் இலர். ஆயினும் பாரியின் இரு பெண்களான **அங்கவை, சங்கவை** யென்பாரை நல்ல நிலையில் இருத்திப் பின் இறக்க விரும்பினார்.

'பகைவர் வயப்பட்டு விட்ட பறம்பு நாட்டில் இனியும் இருத்தல் கூடாது' என்று எண்ணிய கபிலர், பாரி மகளிரோடு வெளியேறினார். வெளியேறும் போது அவர் கண்ணீர் உகுத்துப் புலம்பிய

சொற்கள் பற்பலவாம். பாரி மகளிரும், தம் தந்தையைப் பிரிந்த ஆற்ருமையாற் புலம்பினர். கபிலர் தம் துயரத்தை அடக்கிக் கொண்டு, அம் மகளிரைத் தேற்றினர்; பின்னர், பல இடங் களுக்கும் சென்று, இறுதியில் திருக்கோவலூர்க்கு வந்து சேர்ந்தார்; மகளிர் இருவரையும் தக்க இடத்தில் ஒப்புவித்தார்; அதன்பின் தம் கடன் தீர்ந்ததெனக் கருதி, இனியும் வாழ வியலாது என்பதை மனத்திற் கொண்டு உண்ணு நோன் பிருந்து உயிர் நீத்தார். எனவே இவர் தம் பெருந்தகைமை! என்னே இவரது தியாகம்! பாரி வள்ளலிடம் இவருக்கிருந்த உயரிய கேண்மை தான் எத்தகையது!

முற்காலத்தில் வண்மையும் நட்பும் எங்ஙனம் சிறந்து விளங்கின என்பதற்குப் பாரியின் வரலாறு தக்கதோர் எடுத்துக்காட்டாகும். பாரி படைக்கு அஞ்சாஞகவும், கொடையே உயிரெனக் கொண்ட வஞகவும் விளங்கிப் பெரும் புகழ் எய்தினன். தமிழுலகம் உள்ளளவும் பாரி வள்ளலின் சிறப்பு சிறிதளவும் மறையாது நிலவு வீசும் என்பது உறுதி.

## பயிற்சி

**1. பொருள் காண்க:**

சான்ற, வண்மையோன், வடபால், வரையாத, பற்றுக் கோடு, பெற்றி, நலிகின்றது, சுனை, ஊருணி, கிழமை, அழுக்காறு, முற்றுகை, சரண், அரண், உகுத்து, நோன்பு.

**2. விடை கூறுக:**

1. பாரி ஆட்சி புரிந்த நாடு யாது? அது எங்குள்ளது?
2. பாரியின் சிறப்பியல்புகள் யாவை?

3. பாரி முல்லைக்குத் தேர் கொடுத்த வரலாறு என்ன?

4. பறம்பு மலைநாட்டின் செழிப்பும் செல்வநிலையும் எத்தகையன?

5. முடிவேந்தர் பாரியின் நாட்டை முற்றுகையிட்டது ஏன்?

6. முற்றுகை நீடித்தபோது, உள்நாட்டினர் எவ்வாறு வாழ்ந்தனர்?

7. கபிலர், முற்றுகையிட்ட மூவேந்தரிடம் கூறியதென்ன?

8. பாரி வஞ்சனையாற் கொல்லப்பட்டது எவ்வாறு?

9. இறுதியில் கபிலர் யாது செய்தார்?

3. பிரித்து எழுதுக:

வடபால், செழிப்புற்று, வானளாவிய, நட்புக்கிழமை, பெரும்புகழ்.

4. சேர்த்து எழுதுக:

| | | | |
|---|---|---|---|
| மூன்று | + வேந்தர் | உணவு | + பஞ்சம் |
| சொல் | + அம்பு | பெருமை | + தன்மை |

5. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

சார்ந்த, வழியின்றி, புகாதவாறு, குறைபாடு, இருந்தீதி, அஞ்சான்.

6. கட்டுரைப் பயிற்சி:

நட்பின் சிறப்புக்கு எடுத்துக்காட்டான வரலாறு ஒன்றைப் பற்றிப் பதினைந்து வாக்கியங்கள் எழுதுக.

## இலக்கணம்

சொற்கள் திணை, பால், எண், இடம் ஆகியவற்றை அறிவிக்கும் அல்லவா? ஒரு சொல்லுக்குத் திணை முதலியவற்றைக் கூறுதல் சொல்லிலக்கணம் ஆகும்.

பாரி—உயர்திணை, ஆண்பால், படர்க்கை ஒருமைப் பெயர்.

கொடுத்தான்—உயர்திணை, ஆண்பால், படர்க்கை ஒருமை வினைமுற்று.

'கொடுத்தான்' என்பது வினைமுற்று ஆதலால், இதற்குக் காலம் இன்னதென்பதையும் குறிக்கவேண்டும். இது இறந்த கால வினைமுற்று ஆகும்.

கொடி—அஃறிணை, ஒன்றன்பால் படர்க்கை ஒருமைப் பெயர்.

படர்ந்தது—அஃறிணை ஒன்றன்பால் படர்க்கை ஒருமை இறந்தகால வினைமுற்று.

கீழ்க்காணும் வாக்கியங்களில் உள்ள சொற்களுக்கு, மேற் கண்டவாறு சொல்லிலக்கணம் கூறுக:

நான் படித்தேன்.
நீ பாடினாய்.
அது ஓடிற்று.
பகைவர்கள் சூழ்ந்தனர்.
கிளிகள் உதவின.

## 4. சிற்பக்கலை

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர், மனிதர் நாகரிகமற்றவராகவே வாழ்ந்து வந்தனர். விலங்குகளுக்கும் மக்களுக்கும் அதிக வேற்றுமை யில்லாதவாறு, உலகியல் நிகழ்ந்து வந்தது. அக்காலத்திய மனிதர் உணவுக்குரிய பொருள்களைப் படைத்தற்கும், உடுப்பதற்கேற்ற உடைகளை நெய்வதற்கும், இருப்பதற்குரிய இடத்தை அமைத்தற்கும் அறிவு பெற்றிருக்கவில்லை. நாளடைவில் அவர்கட்குச் சிறிது சிறிதாக அறிவு வளரலாயிற்று. விலங்குகளைப் போன்று புதர்களிலும், மர நிழலிலும் குளிருக்கும் வெயிலுக்கும் ஒதுங்கி வாழ்ந்தவர், அவற்றை நீத்து, இயற்கையில் அமைந்த குகைகளுக்குள் புகுந்து வாழலாயினர். ஆங்கு வாழும் பொழுது தேவைப்பட்ட பொருள்களைத் தாமாகவே படைத்துக்கொள்ளும் ஆற்றலும் அவர்கட்கு உண்டாயிற்று. முதலில் மனிதர் சட்டி, பானை முதலியவற்றையும், ஆயுதங்களையும் உண்டாக்கினர். பின்னர், பலவகைக் கலன்களையும், ஆடைகளையும், குடியிருப்புக் கேற்ற இடங்களையும் உண்டுபண்ணிக் கொண்டனர். இவ்வாறு படைப்புத் தொழிலில் மனிதரின் நாட்டம் கொஞ்சங் கொஞ்சமாக வளர்ந்தது.

ஓரளவு அறிவாற்றலை அடைந்த மனிதர் இயற்கைக் காட்சிகளைக் கண்டு பாராட்டும் உள்ள நிலை வரப் பெற்றனர். மலைகளும், காடுகளும் மரஞ் செடி கொடிகளும் எத்துணை அழகுடையவை யென்பதைக் கண்டனர். நீலத் திரைக்கடலையும், பரந்த வான வெளியையும் கண்டு, அவற்றின் வனப்பு

மிகுதியைச் சிந்தித்தனர். கடலின் அலைகள் அவர்தம் நெஞ்சங்களில் புதிய உணர்ச்சியலைகளை எழுப்பின. மலையின் அருவிகள் அவர்தம் உள்ளங்களில் புதிய நுகர்ச்சியைப் பயந்தன. கதிரவனும், வெண்மதியும், விண்மீன்களும் சிந்தையை மகிழ்வித்து, இன்ப நினைவுகளை உண்டாக்கின. இவ்வாறு காணும் தோற்றங்கள் யாவுமே கவர்ச்சியைப் பெருக்கி, மனிதரைப் பேரறிவின் பிறப்பிடமாகச் செய்துவிட்டன.

அழகுக் காட்சிகளைக் கண்டு சுவைத்த மனிதர், அவற்றையே சிந்தித்து மகிழ்ந்தபோழ்தில், புதிய கற்பனை யுணர்ச்சி பிறந்தது. இயற்கையில் நிறைந்திருக்கும் 'அழகு' என்னும் உயர்ந்த பண்பைச் செயற்கையிலும் உண்டுபண்ணக் கூடும் என்று அறிந்தனர். அவ்வகை அறிவின் வளர்ச்சியிலே ஓவியம் தீட்டத் தொடங்கினர்; பின்னர், தாம் படைத்த பொருள்கள் யாவினுமே அழகுத் திறனை அமைத்து மகிழத் தொடங்கினர். மண்ணிலும் மரத்திலும் பல வடிவங்களை எழுப்பினர். பின்பு கல்லிலும் தம் கைவண்ணத்தைக் காட்ட முற்பட்டனர். இவ்வாறு இயற்கைப் பொருள்களும், கற்பனைப் பொருள்களும் செயற்கை வடிவுபெற்றுச் 'சிற்பங்கள்' என்னும் பெயரைப் பெற்றன.

சிற்பம் சமைத்தலின் தோற்றம்பற்றி இதுகாறும் கூறப்பட்டது. இனி சிற்ப வகைகளையும், அவற்றின் பெருமைகளையும் பற்றிக் காண்போம். சிற்பக் கலை என்பது கல்லில் பலவகை வடிவங்களைச் செதுக்குதல் மட்டுமன்று; செம்பு, பொன், மரம், மண், சுதை, மெழுகு, தந்தம் முதலான பல

பொருள்களிலும், நினைத்த உருவை யமைத்தல் சிற்பக் கலையேயாகும். மனிதரின் அறிவு வளர்ச்சிக் கேற்றவாறு, பலவகைப் பொருள்களையும் இக் கலை தனக்கிடமாகக் கொண்டது.

தமிழகத்தில், பழங்காலத்திய மக்கள் போர்க் களத்தில் விழுப்புண் பட்டு மாண்ட வீரர்களுக்கு '**வீரக்கல்**' எழுப்பினர் என்றும், கற்புடைப் பெண்டிரைத் தெய்வமெனப் பாராட்டிக் கற்படிவம் சமைத்தனர் என்றும் தமிழ் நூல்கள் கூறுகின்றன. தமிழ் நாட்டில் இவ்வகைக் கற்களும், படிவங்களும் இக்காலத்திற்கூடக் காணக் கிடக்கின்றன. இவற்றிலிருந்து பழந் தமிழர் சிற்பக் கலைத் திறனைப் பெற்றிருந்தனர் என்பதை அறிகின்றோம். மற்றும் பண்டைத் தமிழர்கள் மேற்கூறிய கற்களையும் படிவங்களையும் எழுப்பி, அவற்றிற்குக் கோவில் களும் கட்டினர் என்று அறியப்படுகின்றது. கல் எடுத்தற்கும், அதற்கு 'நீர் முழுக்கு'ச் செய்தற்கும், பின்னர் அதனை நடுதற்கும் இலக்கண விதிகளும் வகுக்கப்பட்டிருந்தன என்பது சங்காலக் காப்பிய நூலாகிய '**சிலப்பதிகார**'த்திலிருந்து தெரியவருகிறது. இந்நூலின் வாயிலாக, **சேரன் செங்குட்டுவன்** என்னும் பேரரசன் **கண்ணகி**யென்னும் கற்புடை யணங்குக்குச் சிலை சமைத்துக் கோவிலும் நிறுவிய வரலாறு புலனாகிறது.

மேற்கூறியவாறு தமிழகத்தில் தோற்றமுற்ற சிற்பக் கலை, நாளடைவிற் பெரிதும் வளர்ந்து, இன்று உலகம் போற்றும் புகழைப் பெற்றுள்ளது. தமிழ் நாட்டுச் சிற்பிகள் காவியக் கலையறிவும், ஓவியக் கலைத்திறனும் ஒருங்கே பெற்றிருந்தனர். இதனால், அவர்கள் செதுக்க விரும்பிய உருவங்

களின் பண்பை உணரும் ஆற்றலும், அவற்றின் உருவங்களைச் சித்திரமாகத் தீட்டிவைத்துக் கொள்ளும் திறனும் பெற்றனர். காணும் பொருள்கள் எவையாயினும், அவற்றைச் சிற்பமாகச் சமைத்துவிடும் வன்மை அவரிடம் ஏற்பட்டது. உடலசைவுகளும், உணர்ச்சிகளைக் காட்டும் முக வேறுபாடுகளும் கற்படிவங்களில் சிறிதளவும் உண்மை சிதையாதவாறு காட்டப்பட்டன. இவ் விதமாகக் கல் பேசவும், சிரிக்கவும், ஆடவும், கண்ணீர் சிந்தவும், கருணை காட்டவும் செய்யவே, சிற்பிகளின் பெருமை உயர்வுற்றது. மக்களும் மன்னரும் ஒருமுகமாகச் சிற்பிகளைப் பாராட்டினர்; அவர்கட்கு ஆதரவளித்தனர். இச்செயலால் சிற்பக்கலை ஓங்கி யுயர்ந்தது; பலவகைச் சிற்பங்கள் தோன்றலாயின. சிறு கற்களில் தனிச் சிற்பங்கள் செதுக்குவதோடு, சிற்பிகளின் திறன் முற்றுப்பெற்று விடவில்லை; மலைப்பாறைகளைக் குடைந்து, குகைகளிலே அழியாத பல்வகைச் சிற்பங்களைச் செதுக்கினர்.


கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் **மகேந்திர பல்லவன்** என்னும் மாவேந்தன் காஞ்சியை ஆட்சிசெய்து கொண்டிருந்தான். இவன் காலத்தில் தான் முதன்முதலாகக் கற்கோவில்கள் அமைக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. இவன் காலத்திற்கு முன் நம் தமிழகத்தில் விளங்கிய நூற்றுக்கணக்கான பழங் கோவில்கள் அழியத்தக்க பொருள்களான மண், மரம், சுதை இவற்றால் அமைக்கப்பட்டிருந்தன. மகேந்திர பல்லவன் காலத்திலும், பிற்காலப் பல்லவர், சோழர் காலங்களிலும் அவை கற்றளிகளாக மாற்றப்பட்டன.

சில பழங் கோவில்களில் சுதையால் ஆக்கப்பெற்ற வாயிற் காவலர் உருவங்களும், 'கஜலட்சுமி' யின் உருவங்களும் இருப்பதை நாம் இன்றும் காணக் கூடும். திருவாரூர், திருவிடைமருதூர் ஆகிய இடங்களிலுள்ள கோவில்களில் சுதைச் சிற்பங்கள் உள்ளன.

பல்லவர் கி. பி. 600 முதல் 900 வரையில் நாட்டில் அமைத்த கோவில்கள் மூவகைப்படும். அவை **குடைவரைக் கோவில், ஒற்றைக்கற் கோவில், திருச்சுற்றும் விமானமும் கொண்ட கற்கோவில்** என்னும் மூன்றும். இவற்றுள் குடை வரைக் கோவில் என்பது, மலைச்சரிவிலோ, பெரும் பாறையிலோ ஒருபுறத்தில் குடையப்படும் கோவி லாகும். இவ்வகைக் கோவில்கள் **மாமண்டூர், மகேந்திரவாடி, சீயமங்கலம், மண்டபப்பட்டு, வல்லம், திருச்சிராப்பள்ளி, குடுமியான்மலை** முதலிய இடங்களில் உள்ளன. இக்கோவில்களில் வேலைப்பாடுகளோடு கூடிய தூண்கள் உள்ள முன் மண்டபம், கடவுளர் திருவுருவங்களைப் பொருத்தி யிருக்கும் பாறைப் புரைகள் ஆகியவை காணப் படும். புரைகளின் இருபக்கங்களிலும் வாயிற் காவலரின் வடிவங்கள் செதுக்கப்பட்டிருக்கும்; அவரது தோற்றம் மிக்க பெருமிதத்துடன் இருக்கும்.

மாமல்லபுரத்தில் '**பஞ்சபாண்டவர் இரதங்கள்**' எனப்படும் ஐந்து ஒற்றைக் கற்கோவில்கள் உள்ளன. இவற்றை அமைத்துப் புகழ்பெற்ற மன்னன் **நரசிம்ம பல்லவன்** ஆவான். இக் கோவில்களின் வெளிச் சுவர்களில் பல உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவை கண்ணுக்கும்,

கருத்துக்கும் பெருவிருந்தானவை. மற்றும் கருங்கற்களே அடுக்கிக் கட்டப்பட்ட 'கடற்கரைக் கோவில்' ஒன்று மாமல்லபுரத்தில் உள்ளது.




மாமல்லபுர கோவில்கள்

இதனைக் கட்டுவித்தவன் இராச சிங்கன் என்னும் பல்லவன் ஆவான். இக் கோவிலின் அமைப்பைக் கண்டு வியந்தவர் பலராவர்.

காஞ்சியில் உள்ள வைகுந்தப் பெருமாள் கோவில் பரமேசுவர வர்மன் காலத்தில் கட்டப் பட்டது. இங்குத் திருச்சுற்றுச் சுவர்களில் பல வகைச் சிற்பக் காட்சிகள் உள்ளன. பல்லவர் வரலாற்று நிகழ்ச்சிகள் யாவும் அச்சிற்பங்களின் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளன. அவை சிறந்த கலைவிருந்தும், அறிவு விருந்துமாகவுள்ளன.

**கங்கைகொண்ட சோழேச்சரம்** என்னும் கோவில் இராசேந்திரசோழன் காலத்தில் கட்டப் பட்டது. இக்கோவிலின் அர்த்தமண்டபத்துத் தூண்களுக்குமேல் பலவகை நடனச் சிலைகள் உள்ளன. இலிங்கத்துக்கு எதிரிலுள்ள சுவர்மீது ஆறு வரிசைச் சிற்பங்கள் இருக்கின்றன. அவை **சண்டேச்சுரர் சரிதை, மீனாட்சியம்மை திருமணம்** முதலான புராண வரலாறுகளை அறிவிக்கின்றன. மற்றும் இக்கோவிலின் விமானமும், விமானத்திலுள்ள சிற்பங்களும் சிற்பக் கலைக்கு உயிர் போன்ற சிறப்புடையனவாம்.

இராசேந்திரனுக்கு முன் இராசராச சோழனால்



தஞ்சைக் கோவில்

எழுப்பப்பட்ட 'இராசராசேச்சரம்' என்னும் **தஞ்சைக் கோவில்** தமிழகத்துச் சிற்பக்கலைக்குக் கண்போன்றது. இது அளவிலும், கலைப்பகுதிகளிலும் பெருமை வாய்ந்தது. இக்கோவிலில் 'தக்கணமேரு விமானம்' என்னும் பெயருடைய


விமானமொன்று உள்ளது. இது ஒரு தேரைப் போல் காட்சியளிக்கும். 216 அடி உயரமுள்ள இவ்விமானம் சதுரமாக அமைந்துள்ளது; பதின் மூன்று கோபுர மாடிகளைக் கொண்டது. உச்சியில் 80 டன் நிறையுள்ள ஒரே கல் தளமாக இடப் பட்டுள்ளது. இக்கல்லின்மேல் பொற்றகட்டால் பொதியப் பெற்ற செப்புக் கலசமும், தூபியும் உள்ளன. இத்தகைய இவ்விமானத்தைச் சுற்றிச் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள் அழகு மிக்கவை. ஒற்றைக் கல்லால் செய்யப்பட்ட மிகப் பெரிய சிவலிங்கம், நந்தி, உமையின் வடிவம், வாயில் காவலர் உருவம் ஆகியன இங்குள்ளன.

இவ்வாறு பல்லவர்களுக்குப்பின் சோழர்களால் வளர்க்கப்பெற்ற சிற்பக்கலை, பிற்காலத்தில் நாயக்க மன்னர்களால் போற்றப்பட்டது. மதுரைக் கோவிலும், அங்குள்ள மண்டபங்களும், ' திருமலை நாயக்கர் மகால் ' என்னும் இடமும், இவர் காலங் களில் எழுப்பப்பெற்றவை. அவை அழியாத கலைச் சின்னங்களாய்க் காட்சி தருகின்றன.

நம் இந்திய நாடு பழங்காலம் முதலாகவே கலைத்துறையில் பெருமை படைத்துள்ள தென் பது கற்றறிந்தோர் கண்ட முடிவு. பழமைவாய்ந்த சில சிலைகள் இந்நாட்டில் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன. அவற்றுள் புத்தர் பெருமானுடைய சிலைகளும், கனிஷ்க மன்னருடைய சிலையும் மிகவும் பழமையானவை. 3500 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த சிற்ப உருவங்கள் மொஹஞ்சதாரோ, ஹாரப்பா என்னும் இடங் களிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. இவை யாவும்

சிற்பநுட்பம் மிக்கவையாயுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

பல்லவர் காலத்தில் ஏற்பட்ட குகைக் கோவில்களேபோல், **அஜந்தா**, **எல்லோரா** முதலிய குகைக் கோவில்களும் நம் நாட்டில் உள்ளன. அஜந்தா குகைச் சிற்பங்கள் புத்த சமயத்தைச் சேர்ந்தவர் படைத்த விந்தை மிக்க காட்சிகளாகும். எல்லோராச் சிற்பங்கள், சமணர் இக்கலைக்குச் செய்த பெருந் தொண்டின் விளைவுகளாகும். அசோக மன்னர் அமைத்த கற்றூண்களும், அத்தூண்களின் 'ஸ்தூபி' களும் சிற்பக் கலை நுட்பங்களைக் கொண்டவையே.



எல்லோரா சிற்பம்

இவ்வாறு நம் இந்திய நாடும், அதனுள் நாம் வாழும் தமிழகமும் சிற்பக்கலைக்கு எல்லை வகுத்துப் பீடும், பெயரும் பெற்றுள்ளன. இக்காலத்திலும் இந்நாட்டு மக்கள் அழகுணர்ச்சி, கலையார்வங்களில் மிகவும் ஈடுபட்டு வருகின்றனர். அதன் பயனைச் சிற்பக்கலை மேலும் சிறந்து வளருமாயின், அது இந்நாட்டின் பெருமையையே வளர்ப்பதாகும்.

## பயிற்சி

**1. பொருள் காண்க :**

நாகரிகம், விலங்கு, உலகியல், நீத்து, கலன், நாட்டம், விண்மீன், கைவண்ணம், சுதை, விழுப்புண், கற்படிவம், சமைத்து, நிறுவிய, திருச்சுற்று, விமானம், குடைவரைக் கோவில், புரை, பீடு.

**2. விடை கூறுக :**

1. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் மனிதர் நிலை எவ்வாறு இருந்தது ?
2. மனிதரைப் பேரறிவின் பிறப்பிடமாகச் செய்தவை எவை ?
3. சிற்பம் சமைத்தல் எங்ஙனம் தோன்றிற்று ?
4. சிற்பக்கலை என்பது யாது ?
5. தமிழகத்தில் சிற்பக்கலை தோன்றிய வரலாறு என்ன ?
6. பழந்தமிழ்ச் சிற்பிகளின் சிறப்பியல்புகள் யாவை ?
7. மகேந்திர பல்லவனின் காலத்திற்குமுன் தமிழ்நாட்டுக் கோவில்கள் எவற்றால் அமைக்கப்பட்டிருந்தன ?
8. ‘ குடைவரைக் கோவில் ’ என்பது எத்தகையது ?
9. நம் நாட்டில் குடைவரைக் கோவில்கள் உள்ள இடங்கள் யாவை ?
10. மாமல்லபுரத்தில் சிற்பக்கலைக்கு விருந்தாக உள்ளவை எவை ?
11. கங்கைகொண்ட சோழேச்சரத்தில் சிற்பக்கலை எங்ஙனம் அமைந்துள்ளது ?
12. அஜந்தா, எல்லோரா என்பவை யாவை ? அங்குச் சிற்பக் கலையை வளர்த்தவர் யாவர் ?

**3. பிரித்து எழுதுக :**

மரநிழல், நீலத்திரை, பேரறிவு, அழகுத்திறன், ஓவியக் கலை.

**4. சேர்த்து எழுதுக :**

உலகம் + இயல், குடி + இருப்பு,
சிற்பம் + வகை, கல் + படிவம்,
மலை + பாறை.

5. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :

பழந்தமிழர், ஒருங்கே, புலனாகிறது, அழியத்தக்க, செதுக்கினர்.

6. அறிவுப் பயிற்சி :

உங்கள் ஊரிலோ, ஊருக்கு அண்மையிலோ உள்ள கோவிலுக்குச் சென்று, அங்குள்ள சிற்பங்களைக் கண்டு விளக்கம் தெரிந்து கொள்க.

7. கட்டுரைப் பயிற்சி :

1. மாமல்லபுரத்தின் சிற்பக்கலை பற்றிச் சில வாக்கியங்கள் எழுதுக.

2. 'குடைவரைக் கோவில்' என்பது குறித்துப் பத்து வாக்கியங்கள் எழுதுக.

## இலக்கணம்

தமிழ்நாடு சிற்பக்கலையில் சிறந்திருந்தது.

இவ்வாக்கியத்தில் 'தமிழ்நாடு' என்பது, அந்நாட்டிலுள்ள மக்களை உணர்த்துகிறது. 'தமிழ்நாட்டு மக்கள் சிற்பக் கலையில் சிறந்திருந்தனர்' என்பதே அவ்வாக்கியத்தில் பெறப் படும் பொருளாம். 'நாடு' என்னும் ஓர் இடத்தின் பெயர், அங்குள்ள மனிதரைக் குறிப்பாக உணர்த்துகிறது. இவ்வாறு ஒன்றின் பெயர் மற்றொன்றாய் 'ஆகி' வருமாயின் அதனை 'ஆகு பெயர்' என்று கூறுவர்.

தலைக்கு ஒரு புத்தகம் கொடு.

இவ்வாக்கியத்தில் 'தலை' என்னும் சினையின் பெயர், தலையையுடைய ஒரு பையனை உணர்த்திற்று. இதுவும் ஆகு பெயரேயாம்.

# 5. முத்தமிழ்

**'சங்கத் தமிழ் மூன்றும் தா'** என்னும் செய்யுளடியை மாணவர்கள் ஆரம்பக் கல்வி கற்கும் பருவத்திலேயே அறிந்திருப்பார்கள். 'சங்கத் தமிழ் மூன்று' என்று பகுத்துக் கூறப்பட்ட இம் முத்தமிழாவன யாவை? அவையே **இயல், இசை, நாடகம்** என்பனவாகும். இவ்வாறு மூன்று வகைக் குட்படுத்திய தமிழ் மொழி சங்க காலத்தில் செங் கோல் செலுத்தி ஆண்டது. 'சங்கம்' என்பதும் மூன்ருகும். தலைச் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என்பன அவை. இம் மூவகைச் சங்க காலங்களிலும் தமிழ்த்தாய் பெருமிதத்துடன் நடை பயின்றிருக்கிருள்; தன்னை விரும்பி யடைந் தவர்க்கு வற்ருத கலையுணர்வை ஊட்டியிருக்கிருள். இத் தமிழமுதம் உண்டு, தம்மை யொப்பார் எவரு மின்றி வாழ்ந்த புலவர்கள் பல்லோர் ஆவர். அவர்கள் தாம் உண்ட அமுதத்தின் சிறப்பைப் பிற்காலத்தினரும் உணர்ந்து இன்புறவேண்டு மென்ற பெருநோக்கம் கொண்டனர். அந்நோக் கத்தின் விளைவாகவே இயல், இசை, நாடக நூல்கள் தோன்றின.

மிகப் பழைய காலத்தில் தமிழ்மொழி இந்திய நாட்டின் வடவெல்லை வரையிலும் பரவியிருந்த தென்று நூல்களிலிருந்து தெரிய வருகிறது. மற்றும் இப்பொழுது இந்து மகாசமுத்திரம் உள்ள தென் பகுதி, முன்பு நிலப்பரப்பாக விருந்த தென் றும், அங்குத் தமிழ்ப் பயிர் செழித்து வளர்ந்த தென்றும், கடல் கோள் ஏற்பட்டதனுல் அது அழிந்த தென்றும் வரலாற்று ஆராய்ச்சியாளர்

கூறுகின்றனர். காலத்தின் சுழற்சியில் இயற்கைச் சூழ்நிலை மாறுபடுவது இயல்பு. அவ்வித மாற்றம் ஏற்படுங்கால், மக்கள் நிலையும், மொழி நிலையும் மாறுதலடைவதில் வியப்பில்லை. இங்ஙனம் தமிழ் மொழியும் காலச் சூறுவளியின் முன் தன் உருவம் மாறவே செய்தது. ஆயினும் இக்காலத்தினரின் நற்பேற்ருல், பழந்தமிழ் நூல்கள் பல கண்டுபிடிக் கப்பட்டன. அவற்றின் வாயிலாக நாம் 'முத் தமிழ்'ச் சிறப்பைக் காண்கிருேம்.

முத்தமிழ் எனப்படும் இயல், இசை, நாடகங் களின் இயல்புகளைப் பற்றி இனி அறிவோம். இயல் என்பது உரை நடையும், செய்யுளும் ஆகும். இயற்றமிழ் நூல்களில் இலக்கியம், இலக்கணம் என்ற இரு பிரிவுகளும் உண்டு. இலக்கியம் உரை நடையிலோ, செய்யுள் வடிவிலோ சிறந்த வரலாறு களையும், கருத்துரைகளையும் கூறுவதாகும். இலக் கணம் அவ்வகை நூல்களின் அமைப்பு முறையை விளக்குவதாகும். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து வகை இலக்கணங்கள் உண்டாயின. முற்காலத்தில் அகத்தியம், தொல் காப்பியம் என்னும் இலக்கண நூல்கள் தோன் றின. கடைச் சங்க காலத்தில் **எட்டுத் தொகை, பதினெண் கீழ்க் கணக்கு, ஐம்பெருங்காப்பி யங்கள்** முதலிய இலக்கிய நூல்கள் உண்டாயின. இடைக் காலத்தில் **இராமாயணம், நளவெண்பா, பாரதம்,** முதலியன இலக்கியங்களாய்த் தோன் றின. இவற்றின் பின்னர் பலவகைப் பிரபந்தங்கள் பிறந்தன. நன்னூல், தண்டியலங்காரம் முதலிய இலக்கண நூல்களும் பிற்காலத்தில் உண்டாயின.

மேற்கூறிய இலக்கிய இலக்கண நூல்கள்

அக்காலத்து மக்களின் கல்வி மேம்பாட்டை விளக்கும் கண்ணுடிகளாக இன்றும் விளங்கு கின்றன. இவற்றைக் கற்போர் தமிழ் நாட்டின் பெருமையைப் பற்றி யறிந்து, பேருவகை கொள்வ ரென்பது உறுதி. இவ்வகை நூல்களினின்று தமிழ் மன்னர் திறங்கள், குடிமக்களின் வாழ்க்கைத் தரங்கள் எல்லாவற்றையும் நாம் காணவியலும். உலகியல் அறிவு பெற இவ்வகை நூல்கள் பெரிதும் பயன்படக்கூடும். ஆகையால் இக்காலத்திலும் இயற்றமிழ் நூல்களே ஆயிரக்கணக்காக வெளிவந் திருக்கின்றன. கலை, விஞ்ஞானம், பௌதிகம், தாவரம், பிராணிகள் முதலியவைபற்றிய நூல்கள் இன்னும் அதிக அளவில் இயற்றப்படவேண்டும். மேனுடுகளில் ஏற்பட்டுள்ள கலைவளர்ச்சி சாலப் பெரியதாகும். அவற்றை இக்காலத்துத் தமிழறிஞர், தமிழருக்கு இயற்றமிழ் நூல்களின் வாயிலாக எடுத்துக்கூற வேண்டியது இன்றியமையாக் கடனுகும்.

இனி இசைத்தமிழ் என்பது யாதென்பதைக் காண்போம். பண், தாளம், பாட்டு இம்மூன்றும் இணைந்தவை இசைத் தமிழாகும். இசைத்தமிழி லும் இலக்கியம், இலக்கணம் என்னும் பிரிவுகள் உண்டு. இசைப் பாடல்களின் கோவை இசை யிலக்கியம் என்றும், இசைப் பாடல்களின் அமைப்பு முறை இசையிலக்கணம் என்றும் கூறப் படும். முற்காலத்தில் பாணர்களும், பாடினியரும் இசைத் தமிழைப் போற்றி வளர்த்தனர் என்று தெரிகின்றது. பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம் முதலான இசைநூல்கள் முற்காலத்தில் இருந்தன. இடைக்காலத்தில் தோன்றியவை

**தேவாரம்**, **திருப்புகழ்** முதலியன. இக்காலத்திய கீர்த்தனைகளும், சிந்து, கும்மி, தாலாட்டுப் பாடல் களும் இசைத்தமிழின் பாற்பட்டனவேயாகும்.

இசையென்பது உணர்ச்சியை வெளியிடும் ஆற்றலாக உள்ளது. இசையில் இன்ப ஒலியும் உண்டு; துன்ப ஒலியும் உண்டு. பண், இசை யுணர்ச்சியைக் காட்டும் ஏழு நரம்புகளைக் கொண்டது. ஏழிசைகளுக்குத் தமிழர் வழங்கிய பெயர்கள் குரல், **துத்தம்**, **கைக்கிளை**, **உழை**, **இளி**, **விளரி**, **தாரம்** என்பனவாம். **குறிஞ்சி**, **பாலை**, **முல்லை**, **மருதம்**, **நெய்தல்** என்னும் ஐவகை நிலங்களுக்கேற்ற ஐந்து பண்கள் அக் காலத்தில் வரையறுக்கப்பட்டிருந்தன. இன்ன நேரத்தில் இன்ன பண்ணே பாடத்தக்கது என்ற வரையறையும் செய்யப்பட்டிருந்தது.

இசையை '**நுண்கலை**' என்று அறிஞர் பாராட்டுவர். 'நுட்பக் கலைகள் யாவினும் மிக்க நுட்பம் வாய்ந்தது இசை' என்று '**ஹெர்பர்ட் ஸ்பென்சர்**' என்னும் அறிஞர் கூறியுள்ளார். இவ்வகை அரிய கலையைத் தமிழின் ஒரு பிரிவாக அமைத்து, அதனைக் கண்போற் காத்த பழந் தமிழரின் சிறப்பு மிகவும் பாராட்டத்தக்கது. பேரரசர்களும், குறுநில மன்னர்களும் இசைத் தமிழிற் பேரார்வம் கொண்டிருந்தமையால், பாணர் களும், பாடினி, விறலி முதலானவரும் பெரும்பரிசு களைப் பெற்று வாழலாயினர்; அவர்களின் வாழ்க்கை வளர்ச்சிக்கேற்றவாறு இசைத் தமிழும் வளர்ந்தது.

இனி நாடகத் தமிழ் இன்னதென்று காண் போம். நாடகத்தமிழ் 'நடித்துக் காட்டப்படுவது'

என்பதை யாவரும் அறிவர். இயற்றமிழும், இசைத்தமிழும் சேர்ந்து, மெய்ப்பாடு என்னும் நடிப்புடன் கலந்தால் நாடகத்தமிழ் உண்டாகும். இயலிலும் இசையிலும் நம் செவிப் புலனுக்கே இன்பம் பிறக்கும்; நாடகத்திலோ செவிப்புலனேடு, கட்புலனுக்கும் அவ்வின்பம் பிறக்கும். இதனுல் நாடகம் அனைவராலும் பாராட்டப்படும் ஆற்றல் பெற்றுள்ளது. 'ஒரு பொருளைச் சொல்லால் விளக்குவது இயல்; பாட்டால் விளக்குவது இசை; நடிப்பால் விளக்குவது நாடகம்' என்று பெரியோர் கூறுவர். இந் நாடகத்தமிழ் ஒப்புயர்வற்ற கலையாக விளங்குவதாகும். இதனை வாழ்வோடு ஒட்டிய கலையாக நம் மூதாதையர் போற்றி வளர்த்தனர். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே, நாடகத் தமிழ் நூல்கள் பல தோன்றியிருந்தன. **முறுவல்**, **சயந்தம்**, **செயிற்றியம்**, **குணநூல்** முதலியவை அக்காலத்திய நாடக இலக்கண நூல்களாகும். **சிலப்பதிகாரம்** என்னும் காப்பியத்தில் நாடகக் கலைநுட்பங்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. நாடக அரங்க அமைப்பு முறை, காட்சித் திரையமைப்பு முதலான செய்திகள் இந்நூலினின்று தெரிய வருகின்றன. தமிழில் **பரதம்**, **அகத்தியம்** என்ற பழைய நூல்கள் நாடகக் கலையைப்பற்றி விளக்கின என்றும், அவை பிற்காலத்தில் அழிந்து போயின என்றும் இந் நூலுக்கு உரைவகுத்த '**அடியார்க்கு நல்லார்**' என்பவரின் கூற்றுக்களால் தெரிகின்றது. மற்றும் **பரத சேனுபதியம்**, **மதிவாணர் நாடகத் தமிழ் நூல்** ஆகியவைகளும் அக்காலத்தில் இருந்து, பின்னர் அழியலாயின. இவை யாவும் நாடக

இலக்கண நூல்களே யன்றி, இலக்கிய நூல்கள் அல்ல. 'சிலப்பதிகாரம்' ஒன்றே முத்தமிழ்க் காப்பியமாக இலங்குகின்றது. முற்கால நாடக-இலக்கிய நூலுக்கு இதுவொன்றே எடுத்துக் காட்டாக விளங்குகிறது. ஏனைய நூல்கள் தோன்றிப் பின் அழிந்து போயிருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது. பிற்காலத்தில் தோன்றிய **இராம நாடகம், குற்றாலக் குறவஞ்சி** முதலிய நூல்கள் இக்காலத்திலும் சிறந்த நாடக நூல்களாகப் புகழ் பெற்று விளங்குகின்றன. இராஜராஜ சோழன், இராஜேந்திர சோழன் என்னும் இருமன்னரும் நாடகம் நடித்துக் காட்டுவோருக்கு மானியங்கள் வழங்கிய குறிப்புக்கள் கல்வெட்டுக்களினின்று காணப்படுகின்றன. '**இராஜராஜ விஜயம்**' என்னும் நாடகம், அக்காலத்தில் தஞ்சைக் கோவிலில் நிகழ்த்தப்பட்டுப் புகழ்பெற்றதெனத் தெரிகிறது.

இவ்வாறு பேரரசர்களாலும், புலவர்களாலும், பொதுமக்களாலும் போற்றப்பட்ட முத்தமிழ் நூல்களை மாணவர் அனைவரும் கற்றல் வேண்டும். காலத்துக்கேற்ற புதுமைப் பொலிவையூட்டிப் புதுப்புது நூல்களைப் பேரறிஞர்கள் இயற்றவும் வேண்டும். தமிழன்னைக்கு மக்கள் செய்யும் பெருந்தொண்டு, மொழியைப் போற்றி வளர்த்தலும், விழுமிய புது நூல்களைப் படைத்தலுமே ஆகும்.

### பயிற்சி

1. பொருள் கூறுக :

பெருமிதம், வற்குத, கலையுணர்வு, வடவெல்லை, கடல்கோள், சூறாவளி, இயல், யாப்பு, அணி, பௌதிகம், பண்.

பாடினியர், விறலி, செவிப்புலன், கட்புலன், மானியம், விழுமிய.

2. விடை கூறுக :

1. சங்கத்தமிழ் மூன்று யாவை? முச்சங்கங்கள் எவை?

2. மிகப் பழைய காலத்தில் தமிழ்மொழி எங்ஙனம் பரவியிருந்தது?

3. கடைச்சங்க காலத்தில் உண்டான இலக்கண நூல்கள் யாவை?

4. இசைத் தமிழ் என்பது யாது?

5. முற்காலத்து இசைநூல்கள் யாவை?

6. ஏழிசைகளின் பெயர்கள் என்ன?

7. நாடகத் தமிழின் இயல்பு யாது?

8. முற்காலத்தில் நாடக நூல்களாக விளங்கியவை யாவை?

9. கல்வெட்டுக்களினின்று காணப்படும் செய்தி என்ன?

10. தஞ்சைக் கோவிலில் நிகழ்த்தப்பட்ட நாடகம் யாது?

3. பிரித்து எழுதுக :

தமிழ்த்தாய், இன்புற, வடவெல்லை, முத்தமிழ், மேனாடு.

4. சேர்த்து எழுதுக :

காலம் + சூறாவளி, காண + இயலும், நுண்மை + கலை, பெருமை + ஆர்வம், நாடகம் + நூல்.

5. எதிர்ச் சொற்கள் எழுதுக :

அடைந்தவர், வடவெல்லை, தோன்றிய, புதுமை.

6. கட்டுரைப் பயிற்சி :

1. நீ பார்த்த ஒரு நாடகத்தைப் பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுது.

2. 'முத்தமிழ்' என்பதைக் குறித்துப் பதினைந்து வாக்கியங்கள் எழுதுக.

கூறுகிருர். இவ் வினைமுற்றில் 'கூறு' என்பது பகுதி. 'கிறு' என்பது இடைநிலை. 'ஆர்' என்பது விகுதி.

இச்சொற்களைக் கவனி:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செய்தான் | —செய் | + | த் | +ஆன் | |
| கண்டாள் | —காண் | + | ட் | +ஆள் | |
| சொல்வார் | —சொல் | + | வ் | +ஆர் | |
| ஓடினது | —ஓடு | + | இன் | +அ | + து |
| ஓடின | —ஓடு | + | இன் | +அ | |

செய்தான்—இதனுள் 'ஆன்' என்பது விகுதியாக வந்துள்ளது அல்லவா? இது 'ஆண்பால் விகுதி' எனப்படும்.

'ஆள்'—பெண்பால் விகுதி.
ஆர்—பலர்பால் விகுதி.
து—ஒன்றன்பால் விகுதி.
அ—பலவின்பால் விகுதி.

# 6. வாணிகம்

உழவர்கள் நிலத்திற் பாடுபட்டுப் பயிர் வளத்தைப் பெருக்கிப் பலவகைத் தானியங்களை விளைவிக்கின்றனர். தொழிலாளர்கள் தம் கைத்திறனால் பலவகைச் செயற்கைப் பொருள்களைப் படைக்கின்றனர். இவ்வாறு நிலத்திலிருந்தும், தொழிலாளரின் உழைப்பிலிருந்தும் பெறப்படும் அப்பொருள்கள், நாட்டிலுள்ள மக்கள் அனைவர்க்குமே தேவையாக உள்ளன. எல்லோருமே உழவுத் தொழிலைச் செய்வதில்லை. அங்ஙனமே, எல்லோரும் செயற்கைப் பொருள்களைப் படைப்பதுமில்லை. மக்கள் பலவகையான பணிகளை ஆற்றியே இந்நிலவுலகில் வாழ்கின்றனர். ஆதலின் தமக்குத் தேவையான பொருள்களைப் பிறரிடமிருந்து பெற்றுக்கொள்ளுகின்றனர். ஒருவன் தான் விளைவித்த பொருள்களையோ, தான் திரட்டிய பொருள்களையோ பிறருக்கு விலைபேசி விற்பது '**வாணிகம்**' எனப்படும்.

முற்காலத்தில் மக்கள் வாணிகம் நடத்திய முறை 'பண்டமாற்று முறை' எனப்படும். ஒருவன் தன்னிடமுள்ள ஒரு பொருளைக் கொடுத்துத் தனக்குத் தேவையான வேறொரு பொருளைப் பிறரிடமிருந்து பெற்றுக் கொள்ளுதலே 'பண்டமாற்று' ஆகும். இக் காலத்திற்கூட நம் நாட்டில், அங்காடிப் பெண்களிடம் அரிசியைப் போட்டுத் தேவையான கீரை, காய்கறி, கறிவேப்பிலை, கொத்துமல்லி முதலியவற்றைப் பெற்றுக்கொள்ளும் பழக்கம் இருந்து வருகிறது. இந்த முறை

யைக் காட்டிலும் சீர்பெற்ற வாணிக முறையே எல்லா நாட்டினர்க்கும் பலன் தருவதாகும். ஆகையால் நாளடைவில் மக்கள் நாணயங்களை ஏற்படுத்தி, அவற்றைக் கொண்டே வாணிகம் நடத்தத் தொடங்கினர். ஒவ்வொரு பொருளுக்கும் நாணய மதிப்பிடப் பெறுவதால், நாணயங்களால் எப்பொருளையும் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. மேலும், நாணயம் எல்லோருக்கும் பொதுவான பொருளாகவும் உள்ளது. ஆதலின் நாணயங்களைக் கொண்டு விற்றல், வாங்கல் ஆகிய வாணிகத்தைச் சிறப்பாக நடத்தமுடிகிறது.

வாணிகத் துறையை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். **கடல் வாணிகம், தனிவாணிகம், கூட்டு வாணிகம்** என்பவையே அவையாம். கடல் வாணிகமாவது ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குக் கடல் வழியாகக் கலங்களில் பொருள்களை ஏற்றியனுப்பி விற்பதாகும். ஒரு நாட்டில் சிலவகைப் பொருள்களே கிடைக்கும்; வேறு சில வகைப் பொருள்களுக்கு அந்நாடு மற்ற நாடுகளையே எதிர்பார்க்கும். ஆதலின் பிறநாடுகளுக்குத் தேவையான பொருள்கள் ஒரு நாட்டில் இருப்பின், அவற்றைப் பிறநாடுகளுக்கு அனுப்பிப் பெரும் பொருள் ஈட்டவியலும். இவ்வித வாணிகம் மிக்க சிறப்புடையது. ஒருவரே தனியாக வாணிகம் செய்யின் அது 'தனிவாணிகம்' எனப்படும். பலர் சேர்ந்து வாணிகம் செய்வாராயின், அது 'கூட்டு வாணிகம்' ஆகும்.

தமிழ் நாட்டு மக்கள் முற்காலத்திலேயே வாணிகத் துறையில் சிறப்புற்றிருந்தனர் என்று இலக்கியங்கள், வரலாறுகள் வாயிலாகத் தெரிய

வருகிறது. பழந்தமிழர் மரக்கலம் அமைக்கும் திறனைப் பெற்றிருந்தனர். '**கலம் செய் கம்மியர்**' என்று வரும் மணிமேகலைத் தொடர் இதனை அறிவிக்கிறது.

முற்காலத்தில் கடல் வாணிகத்திற்குச் சிறந்து விளங்கிய துறைமுகங்கள் **காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, வஞ்சி, தொண்டி** முதலிய இடங்களில் இருந்தன. தமிழர் மேற்றிசையிலுள்ள கிரேக்கநாடு, கீழ்த்திசையிலுள்ள சுமத்திரா, சாவகம் முதலிய தீவுகள் ஆகிய இடங்களோடும் வாணிகம் நடத்தினர். வாணிகத்திற்குரிய பொருள்களாய் விளங்கியவற்றுள் பட்டாடை, பருத்தியாடை, மிளகு, முத்து, தந்தம் முதலியன சிறப்பித்துக் கூறத் தக்கனவாகும். இவை தமிழ் நாட்டிலிருந்து பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களேயாம். பிறநாட்டு வணிகர்களிடமிருந்து தமிழர் இறக்குமதி செய்த பொருள்களும் உண்டு. அவை கண்ணாடி, பித்தளை முதலியன.

காவிரிப்பூம்பட்டினம், முசிறி, தொண்டி முதலான துறைமுகங்களில் கப்பல்கள் மிகுதியாகக் காணப்பட்டன. 'யவனர்' எனப்படும் கிரேக்க வணிகர் மேற்கூறிய இத்துறைமுகப்பட்டினங்களில் தம் கப்பல்களுடன் வந்து தங்கியிருந்த வரலாறு தெரியவருகிறது. மற்றும், சிங்களம், புட்பகம், சீனம், சாவகம் முதலிய நாடுகளிலிருந்து வந்த வணிகர்களும் தமிழ்நாட்டு வணிகர்களோடு வாணிகம் புரிந்தனர். இவ்வாறு தமிழ் நாட்டு வணிகர்கள் பிறநாடுகளுக்குச் செல்லுதலும், பிறநாட்டு வணிகர்கள் தமிழ்நாட்டுக்கு

வருதலும் அக்காலத்தில் மேன்மையோடு நிகழ்ந்தன.

முற்காலத்தில் தமிழ்நாட்டு மக்களுள் வணிகப் புலவர்கள் பலர் இருந்தனர். மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனர், உறையூர் இளம்பொன் வணிகனர் என்பவர்கள் முற்கால வணிகப் புலவராவர். இவர்கள் சிறந்த தமிழ்ப் புலமையும், வாணிகத் துறையறிவும் கொண்டிருந்தனர். இவ்விருவருள் சாத்தனர் என்பவரே 'மணிமேகலை' யென்னும் பெருங்காப்பியத்தை இயற்றியவர் ஆவர். 'கூலம்' என்ருல் தானியம் என்பது பொருளாம். ஆதலின், இவர் தானிய வாணிகத்தில் திறமிக்கவர் என்று அறியப்படுகிறது. 'கொள்வதூஉம் மிகை கொளாது, கொடுப்பதூஉம் குறை கொடாது, பண்டம் பகர்ந்து பொருள் ஈட்டல்' என்னும் வாணிக அறநெறியை இவ்வணிகப் புலவர்கள் நன்கறிந்திருந்தனர். வாணிகத்திற்குக் கணிதம் இன்றியமையாத கல்வியாகும். கடை வைத்துக் கணக்கு எழுதி, முறையாக வாணிகம் செய்தலே இத்தொழிலின் வளர்ச்சிக்கு அடிப்படைப் பண்பாகும். இப்பண்பில் முற்காலத் தமிழர் மூதறிவு பெற்றிருந்தனர்.

இக்காலத்தில் கல்வி கற்ற பெரியோர்கள் வாணிகத் துறையில் ஈடுபட்டுப் பெரும் பொருள் ஈட்டுகின்றனர். அமெரிக்க நாட்டிலுள்ளோர் இன்றைய உலகில் வாணிகத்திற்குத் தலைமை தாங்கியுள்ளனர். இதற்கு முக்கியக் காரணமாயிருப்பவை இவர்களின் வாணிக அறிவும், பொருள் விளைவு செய்யும் திறனுமேயாம். ஒரு நாட்டின் செழிப்புக்கு நல்ல விளைவும், அவ்விளைவை வாணி

கம் நடத்தும் ஆற்றலுமே இன்றியமையாதவை யாகும். இவையிரண்டும் சேருமாயின், அந்நாடு பொருளாதாரத் துறையில் சிறப்புற்று விளங்கும் என்பதில் தடையேதுமில்லை.

வாணிகத்தாற் பெறப்படும் நன்மைகள் பல வாகும். தேவை போக மிகுந்த பொருள்களைப் பயன்படுத்திப் பொருள் திரட்டலாம். பிற நாட்டினருடைய தொடர்பால் அறிவையும், நாகரிகத்தையும் பெருக்கிக் கொள்ளலாம். மேலும், பல விதப் பழக்க வழக்கங்களைக் கொண்ட பல்வேறு மனிதர்களிடையே பழகும் வாய்ப்புண்டாகும். பிறரிடம் பழகுவது இன்றியமையாததாயிருப்பதால், பொறுமை, ஊக்கம் முதலான தன்மைகள் ஏற்படவும் இடமுண்டு. இவற்றுடன், வாணிகத்தால் நாட்டின் செல்வ நிலையைப் பெருக்கி, இன்ப வாழ்க்கைக்குரிய வசதிகளைத் தேடிக்கொள்ளவும் இயலும்.

இவ்வித நன்மைகளை அளிக்கும் வாணிகத் துறை நம் நாட்டில் பெரிதும் வளர்ச்சியடைய வேண்டும். அதற்கு அடிப்படையான விளைவுகளும் பொருள்களும் பெருகவேண்டும். இவ்வுண்மையை யாவரும் அறிந்து, ஊக்கத்துடன் பாடுபட்டால், பாரத நாடு செழித்துச் சிறப்புறும்; பாரத மக்களும் துன்பமற்ற நல்வாழ்வைப் பெறுதற்கு வழியுண்டாகும்.

## பயிற்சி

1. பொருள் கூறுக :

பண்டமாற்று, அங்காடிப் பெண், கலங்கள், ஈட்ட, கம்மியர், துறைமுகம், யவனர், கூலம், பகர்ந்து, மூதறிவு.

2. விடை கூறுக :

1. வாணிகம் எனப்படுவது யாது ?
2. 'பண்ட மாற்று முறை' என்றால் என்ன ?
3. நாணயங்களே வாணிகத்திற்குச் சிறந்தவை. ஏன் ?
4. மூவகை வாணிகங்கள் எவை ?
5. பழந்தமிழர் வாணிகத்திற் சிறந்திருந்தனர் என்பதற்குச் சான்றுகள் யாவை ?
6. பழந்தமிழ் நாட்டில் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள் யாவை ?
7. பழந்தமிழ் வணிகர்களோடு தொடர்பு கொண்ட பிற நாட்டு வணிகர்கள் யாவர் ?
8. வாணிக அறநெறி யாது ?
9. வணிகப் புலவர்கள் யாவர் ?
10. ஒரு நாட்டின் பொருளாதார உயர்வுக்கு எவை தேவை?
11. வாணிகத்தால் ஏற்படும் நன்மைகள் யாவை ?

3. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :


சீர்பெற்ற, தொடர்பு, பெருக்கி, நல்வாழ்வு.

4. கட்டுரைப் பயிற்சி :

'பழந்தமிழர் வாணிகம்' என்னும் தலைப்பின் கீழ், பதினைந்து வரிகள் எழுதுக :

## இலக்கணம்

1. உழைத்தனன்—இதில் 'அன்' என்பது ஆண்பால் விகுதியாய் வந்துள்ளது.
   உழைத்தனள்—'அள்' – பெண்பால் விகுதி.
   உழைத்தனர்—'அர்' – பலர்பால் விகுதி.
2. ஓடிற்று – இதில் 'று' என்னும் விகுதி ஒன்றன் பாலுக்கு வந்தது.
   ஓடா (ஓடமாட்டா)—'ஆ' என்பது பலவின்பால் விகுதியாய் வந்தது.
3. செய்தேன், செய்வோம் : 'ஏன், ஓம்' என்பன தன்மை விகுதிகள்.
   செய்வாய், செய்வீர் : 'ஆய், ஈர்' என்பன முன்னிலை விகுதிகள்.
   செய்தான், செய்தாள், செய்தார், செய்தது, செய்தன. } 'ஆன், ஆள், ஆர், து, அ, என்பன படர்க்கை விகுதிகள்.



# 7. விநோபா பாவே

அண்ணல் காந்தியடிகளின் கொள்கைகளை யெல்லாம் செயலளவில் நிறைவேற்றிவரும் பெரியார் விநோபா பாவே ஆவார். அண்ணலின் வாழ்நாட் காலத்தில், அவருடைய ஆன்மிகப் புதல்வராய் விளங்கிய இவர், அவர் மறைந்தபின் அவர் தம் மறு தோற்றமாகவே காட்சியளிக்கின்றார். இன்று பல்லாயிரக்கணக்கான ஏழை உழவர்களுக்கு வாழ்வளித்துவரும் இவர்தம் பெரு முயற்சியே '**பூதான இயக்கம்**' என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இன்று ஆயிரமாயிரம் உழைப்பாளர்கள் உழைப்புக்குரிய தொழிலும், தொழிலுக்

83529
TB
P31,J9(2)
N57

குரிய நிலமும் பெறும் வாய்ப்பு ஏற்பட்டிருக் கிறது. இதற்கு வழிகாட்டியாகவும், இவ்வியக் கத்தின் தலைவராகவும் விளங்கும் விநோபா பாவே யின் வாழ்க்கை வரலாறு மிகவும் உயரிய பண்பு களைக் கொண்டது.

விநோபா பாவே 1895-ஆம் ஆண்டு செப்டம் பர் மாதம் 11-ஆம் நாள், பம்பாய் மாகாணத்தில், '**கொலாபா**' மாவட்டத்தில் '**காகோடா**' என் னும் கிராமத்தில் பிறந்தார். **நரஹரி சம்புராவ் பாவே** என்பவர்க்கும், **ருக்மிணி தேவி** என்பவர்க் கும் முதற் பிள்ளையாகப் பிறந்த விநோபா, பெற் றோரின் பாராட்டுக்கும், மற்றோரின் சீராட்டுக்கும் உரியவராக விளங்கினர். விநோபாவின் இயற் பெயர் **விநாயக் நரஹரிபாவே** என்பது. இப் பெயர் '**விநாயக்**' என்றும், '**விந்யா**' என்றும் சுருக்கமாக்கப்பட்டு அழைக்கப்படுதலுமுண்டு. '**விநோபா**' என்னும் பெயர் காந்தியடிகளால் இவருக்குச் சூட்டப்பட்ட திருப்பெயராகும். சம்பு ராவ் பாவே பரோடா அரசாங்கத்தில் தலைமைக் குமாஸ்தாவாகப் பணியாற்றினர்; தம் அருமை மகனுக்குத் தக்க கல்வியை ஊட்டுவதில் ஆர்வஞ் செலுத்தினர். ருக்மிணிதேவியாரும் தம் மகனைக் கண்ணுங்கருத்துமாகப் பேணி, நல்லுரையை யூட்டி வளர்த்தார்.

ஒருநாள் பிச்சைக்காரன் ஒருவன் விநோபா வின் வீட்டு வாயிலில் வந்து நின்று பிச்சை கேட் டான். விநோபா அந்த மனிதனைக் கண்ணுற்றார். அவனோ நல்ல உடல் வலிமையும், பருமனும் உள்ள வனாகத் தென்பட்டான். உடனே அவர் தம் தாயாரிடம், "அம்மா! இவனுக்குப் பிச்சை போடு

வதால் சோம்பலை வளர்க்கும் குற்றத்திற்கு நாம் ஆளாவோம்,'' என்றார். விநோபாவின் அக் கூற்றில் புதைந்திருந்த உண்மையை அன்னை அறியாமலில்லை; ஆயினும் அன்னையார், ''மகனே! இவனைப் பிச்சைக்காரன் என்று யார்தாம் சொல்ல முடியும்? ஒருகால் இவன் கடவுளாகவும் இருக்கக் கூடுமன்றோ! கடவுள் இவ்வகை வடிவங்களிலே வருவதுதான் வழக்கம்,'' என்றுகூறி, அப்பிச்சைக் காரனுக்கு உணவிட்டு அனுப்பினார். தாயின் இச்செயல் விநோபாவுக்கு ஒரு படிப்பினையை ஊட்டிற்று. 'உலகத்தின் உயிர்கள் யாவும் இறை வனின் தோற்றங்களேயன்றி வேறில்லை' என்னும் உண்மையை உணர்ந்தார்.

விநோபாவின் ஆரம்பக்கல்வி பரோடாவில் உள்ள ஆரம்பப் பள்ளியொன்றில் தொடங்கிற்று. அங்கே இரண்டு ஆண்டுகள் கற்றபின், தந்தை யையே ஆசிரியராகக் கொண்டு மூன்று ஆண்டுகள் வரை கணிதம், ஆங்கிலம் ஆகிய இவற்றைக் கற்றுக்கொண்டார். இயற்கையிலே நல்ல ஞாபகத் திறனும், நுண்மதியும் வாய்க்கப்பெற்றிருந்த இவர்க்குப் பொது அறிவை வளர்க்கும் நன்னூல் களைக் கற்பதில் ஆர்வம் மிகுந்தது. ஒருசமயம் இவர் 'பக்த விஜயம்' என்னும் நூலைத் தாயாருக்கு வாசித்துக் காட்டிவந்தபோது, இடையில் ஒரு ஐயப்பாடு கொண்டு வினவினார். ''அம்மா! இத் தகைய மகான்களை யெல்லாம் இந்தக் காலத்தில் காண்பது அரிதல்லவா?'' என்று கேட்ட மகனை நோக்கி, அன்னை, ''மகனே! இந்தக் காலத்திலும் கூட மகான்கள் இருக்கின்றனர். அவர்கள் இல்லாது உலகியல் நடைபெற வியலாது. அத்

தகையோர் நம் கண்களில் தென்படுவதில்லை,'' என்றார். பிற்காலத்தில் காந்தியடிகளை முதன் முதலிற் கண்டபோது, விநோபா 'மகானைக் கண்டுவிட்டேன்' என்று பெருமகிழ்வுற்றுத் தாயின் அருஞ் சொற்களையும் நினைவு கூர்ந்தார். இவ் வாறு அன்னையின் நன்மொழிகள் பல, இவர் தம் நெஞ்சில் நீங்காத இடம் பெற்றன.

1907-ல் விநோபா பரோடாவிலுள்ள அரசாங்க உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். அக் காலத்தில் பாடப் புத்தகங்களையெல்லாம் விரைவிற் படித்து முடித்துவிட்டு, மற்றப் பொது நூல்களைக் கற்பதிலேயே பெரிதும் ஈடுபடுவது இவரது வழக்க மாயிற்று. இளம் விநோபாவின் உள்ளத்தில் தக்க இடம் பெற்ற நூல்கள் **தாஸபோதம், கேகா வளி, மாஜினி சரித்திரம்** முதலியவை. மற்றும் இவரால் வாசிக்கப்பெருத சிறந்த நூல்களே இல்லை யென்று கூறல் பொருந்தும். **லோகமான்ய திலகர்** அக்காலத்தில் நடத்திய '**கேஸரி**' என்னும் பத்திரிகையை விநோபா பெரிதும் விரும்பி வாசிப் பார். '**கால்**' என்னும் பெயருடைய மற்ருெரு செய்தித் தாளும் இவர் கவனத்தைக் கவர்ந்த தாகும். இவ்வகைப் பொது அறிவினுல், விநோபா வுக்குச் சிந்தனை வளரலாயிற்று.

இவ்வாறு இளமையிலேயே உயரிய நூலறிவு பெற்ற இவர்க்குத் தத்துவ ஞானம் வளர்ந்தது. தியாக மனப்பான்மையும் பற்றற்ற நிலையும் வேரூன்றலாயின. 'நாட்டின் நல்வாழ்வுக்குத் தம்மை அளித்து விடுவதே சிறந்தது' என்ற நோக்கத்தைக் கொண்டார். 1913-ல் பள்ளிப் படிப்பை முடித்து, 'மெட்ரிகுலேஷன்' தேர்விலும்

வெற்றிபெற்ருர். பெற்ரூேர் கல்லூரியில் மகனைச் சேர்ப்பிக்கத் தீர்மானித்தனர். விநோபாவின் உள்ளமோ அக்குறிக்கோளைச் சிறிதும் நாடாது, பொதுநலத் தொண்டு புரியும் திட்டத்திலேயே ஊறியிருந்தது. ஆயினும் பெற்ரூேரின் வற்புறுத்தலுக்கு இணங்கிக் கல்லூரியிற் சேர்ந்து இரண்டாண்டுகள் கற்ருர். இவ்வாண்டுகளில் இவர் மனம் சிந்தனைப் போராட்டங்களில் மூழ்கி, விடுதலை பெறத் துடித்துக்கொண்டிருந்தது. சங்கங்கள் கூட்டிச் சீர்திருத்தச் சொற்பொழிவுகளை நிகழ்த்துவதிலும், கீதை, உபநிடதம் போன்ற நூல்களைக் கற்பதிலுமே அன்ருடம் இவருடைய பெரும்பொழுது கழிந்தது. பிரம்மசரிய நெறியில் பெரு விருப்புக்கொண்ட இவர் செருப்பு அணிதல், மெத்தையிற் படுத்தல் ஆகியவற்றைத் துறந்தார். இவ்வாறு இவர் உள்ளப்போக்கு நூதனமான முறையில் அமைந்தது.

1916-ல் விநோபா, பரீட்சைக்குச் சில நாட்கள் முன்னர், தாம் பெற்ற தகுதிப் பத்திரங்களையெல்லாம் தீக்கு இரையாக்கினர். அன்னையார் 'ஏன்' என்று கேட்டபோது, "கல்லூரியை விட்டு வெளியேறத் துணிந்துவிட்டவனுக்கு, இவை தேவையில்லாத சுமையல்லவா? அதனுலேயே அக்கினிக்கு இவற்றை அளித்துவிட்டேன்," என்ருர். மகனின் மாறுதலைக் கண்டுகொண்ட அன்னையார், இனி அவரை மாற்ற யாராலும் இயலாது என்னும் உண்மையை உணர்ந்தார். அதனுல், ஏதும் மறுத்துப் பேச, அவர் விருப்பங் கொள்ளவில்லை.

விநோபா அவ்வாண்டு, பரீட்சை எழுதவில்லை;

தம் இருப்பிடத்திலிருந்து புறப்பட்டு, எவரிடமும் கூறிக்கொள்ளாமலே துறவிபோல் வெளியேறினர்; காசிக்கு வந்து சேர்ந்து, நூல்களைக் கற்பதும், தாய்நாட்டு விடுதலை இயக்கங்களில் கலந்து கொள்ளுதலுமாகிய செயல்களில் ஈடுபட்டார். ஒரு சமயம் காந்தியடிகளின் உள்ளமுருக்கும் சொற் பொழிவைப் பத்திரிகை வாயிலாகப் படித்தறிந்த விநோபா, அடிகளைக் காண அவாக் கொண்டார். 1916-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7-ஆம் நாள் முதன்முதலாக அடிகளை விநோபா கண்டார். அடிகளின் சத்தியாக்கிரக ஆசிரமத்தில் சேர்ந்து கொண்டார்.

ஆசிரம வாழ்க்கையை மேற்கொண்ட விநோபா அனைவராலும் பாராட்டப்பட்டார். அரையாடை யும் ஒரு மேலங்கியுமே அணிவதைப் பழக்கமாகக் கொண்டார். பஞ்சு கொட்டும் வேலையைச் சில காலம் செய்தார். மற்றும் ஆசிரமப் பணிகள் யாவற்றையும் விருப்புடன் ஏற்றுச் செய்துவந்தார். ஒரு சமயம் அடிகளிடமிருந்து ஓராண்டு விடு முறை பெற்றுச் சென்று, அடிகளின் கொள்கை களையெல்லாம் செயலில் வெளிக்காட்டித் திரும்பி வந்து சேர்ந்தார். 1918-ல் இவருடைய அன்னை யார் இறந்தார். அத்துயரம் இவர் நெஞ்சை அதிகம் தாக்கவில்லை. துறவிபோல் மனநிலை வாய்க்கப் பெற்றவராதலின், அமைதியை இழக் காது பணியாற்றினர்.

ஆசிரமத்தில் விநோபாவுக்குப் பெயரும் புகழும் பரவின. காந்தியடிகள் பொது வேலை களுக்காக ஆசிரமத்தை விட்டுச் செல்லுங் காலங் களில், அவர் நிலையிலிருந்து ஆசிரமத்தை இவரே

நடத்துவது பழக்கமாயிற்று. 1921-ல் விநோபா வைத் தலைவராகக் கொண்ட புதிய ஆசிரமமொன்று நிறுவப்பட்டது. நூல் நூற்றல், கிராம நலனுக்காக உழைத்தல், தம் வேலைகளைத் தாமே செய்து கொள்ளுதல் முதலான செயல்கள் இங்கு நிகழ்ந் தன. 1923-ல் தேசீயக் கொடி சத்தியாக்கிரகம் நடைபெற்றது. அவ்வமயம் விநோபாவும் அதில் கலந்துகொள்ளவே ஓராண்டுச் சிறைவாழ்க்கை பெற்றார். பின்னர் 1924-ல் அரிஜனங்களின் ஆலய நுழைவுக்காக நிகழ்ந்த சத்தியாக்கிரக இயக்கத் தில் கலந்துகொண்டார். வர்தா தாலுகாவைச் சுற்றியுள்ள முந்நூறு கிராமங்களை ஒன்றுசேர்த் துக் 'கிராமத் தொண்டு முறை'யை ஆரம்பித்து நடத்தினர். 1932-ல் மீண்டும் சிறை சென்ற விநோபா, சிறையில் கீதையை விளக்கம் செய்து, அங்கிருந்த ஏனைய தொண்டர்களுக்குப் பேருதவி புரிந்தார்.

சிறையிலிருந்து இவர் விடுவிக்கப் பெற்றதும், **பௌனர்** என்னும் நதிப்பக்கம் உள்ள மலைச் சாரலைத் தக்க இடமாகக் கருதி, அங்கேயே ஆசிர மத்தையும் மாற்றிக்கொண்டார். இவ்விடத்திற்கு 'பரம்தாம் ஆசிரமம்' என்று பெயரமைந்தது. இங்குள்ளவர் யாவரும் தேவைப் பொருள்களைத் தாங்களாகவே உற்பத்தி செய்துகொள்ள வேண்டு மென்ற தீர்மானம் செயற்பட்டு, அவ்வண்ணமே நடந்தது.

1940-ல் 'தனிப்பட்டோர் சத்தியாக்கிரகம்' ஆரம்பிக்கப்பட்டது. 'உலகப் போரில் இந்திய நாடு ஈடுபடவில்லை' என்பதை உலகுக்கு அறி விக்கவே அவ்வியக்கம் தொடங்கிற்று. அவ்வமயம்

காந்தியடிகள் விநோபாவை முதல் சத்தியாக்கிரகி யாகத் தேர்ந்தெடுத்தார்; அவரைக் குறித்து நீண்ட அறிக்கையொன்றும் மக்களுக்கு விடுத்தார். விநோபா அவ்வாறே சத்தியாக்கிரகம் செய்து சிறை புகுந்தார். 1942-ல் விநோபா வேலூர்ச் சிறையிலிருக்க நேர்ந்தது. அவ்வமயம் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளையும் கற்றார்.

1945-ல் விடுதலை செய்யப் பெற்றுப் பௌனார் ஆசிரமம் திரும்பிய விநோபா கிராமத் தொண்டு களைத் தொடர்ந்து நடத்திவரலானார். 1947-ல் ஆகஸ்டு மாதம் 15-ஆம் நாள் இந்திய நாடு உரிமை பெற்றது. அதைத் தொடர்ந்து 1948-ஆம் ஆண்டு அண்ணல் காந்தியடிகள் காலமெய்தினார். விநோபா தவிர்க்க முடியாத இக்குறையை யெண் ணித் தமக்குள் சிந்தனை செய்தார். மக்களின் நலம் நாடி, நாடெங்கும் சுற்றுப்பிரயாணம் செய் தல் தேவையாகப்பட்டது. 1948-ல் சேவா கிரா மத்தில் 'சர்வோதய சமாஜம்' என்ற இயக்கத்தை ஆரம்பித்தார்; மகாநாடுகள் ஆண்டுதோறும் நடத்தப்பெற்றன.

விநோபா 1951-ல் ஹைதராபாத்தைச் சேர்ந்த ஊர்களில் தால்நடையாகப் பிரயாணம் செய்த போது, '**பூதான**' இயக்கம் ஆரம்பமாயிற்று. **பொச்சாம் பள்ளி** யென்னுமிடத்தில் ஒரு கிழவர் எளியவர்களின் சார்பில் விநோபாவிடம் வந்து "80 ஏக்கர் நிலம் அளித்தால் உழைத்து வாழ் வோம்" என்று கூறினார். விநோபா தமக்கென் ஒரு பொருளும் வைத்துக்கொள்ளாத துறவி யன்றோ! ஆயினும், அவர்க்கு ஒரு யோசனை

தோன்றிற்று. 'நிலமுடையோர், தம் நிலத்தின் ஒரு பகுதியை நிலமில்லாதவர்க்குக் கொடுத்தால் எத்துணை நலம் பிறக்கும்!' என்று எண்ணி, அங்ஙனமே செயலாற்ற முற்பட்டார். முதல் பூதானம் **இராமச்சந்திர ரெட்டி** என்பவரால் செய்யப்பட்டது.

அன்று முதல் விநோபா '**பூதானத்தின் தந்தை**' என்று புகழப் பெறலானார். இவர் அன்றிலிருந்து நம்நாட்டின் பலவிடங்களுக்கும் சென்று, 'பூதான' இயக்கத்தை ஆற்றிவருகிறார். பூதான இயக்கத்துடன் 'சம்பத்தி தானம்' என்ற இன்னொரு இயக்கமும் இவரால் ஆரம்பிக்கப்பட்டது. அது, பொருளிலார்க்குப் பொருளுடையார் பொருள் கொடுத்தலேயாகும். விநோபா பாவேயின் இச்செயல்கள் உலகத்தையே கவர்ந்திருக்கின்றன. அன்பினால் மக்கள் நலம் பெருகும் வழியே பூதானத்தின் தத்துவமாகும். இந்நாட்டு மக்களுள் ஒருவரேனும் உழைப்பும் ஊதியமும் இன்றி வருந்துதல் கூடாது என்பது இவரது உன்னத இலட்சியம். **காற்றும், ஒளியும், நீரும், தீயும் போல, நிலமும் மனிதர்க்குப் பொதுவான உரிமைப் பொருள் என்னும் உண்மையை,** அன்பு முறையில் விநோபா அறிவித்துவருகிறார். மக்கள் இவரது முயற்சியில் பங்கெடுத்துக் கொண்டு தொண்டாற்றுதல் முக்கியக் கடனாகும்.

**பயிற்சி**

1. பொருள் காண்க :

அண்ணல், ஆன்மிகப்புதல்வர், திருப்பெயர், ஐயப்பாடு, மனப்பான்மை, பற்றற்ற, குறிக்கோள், தகுதிப்பத்திரம், அரை, அங்கி, சத்தியாக்கிரகி.

**2. விடை கூறுக :**

1. விநோபாவின் இயற்பெயர் யாது? இவருடைய பெற்ஞேர் யாவர்?

2. விநோபாவுக்கு, அன்னை அளித்த நல்லுரைகள் யாவை?

3. 'பக்த விஜயம்' என்னும் நூலைப் படித்தபோது, விநோபாவுக்கு உண்டான ஐயப்பாடு யாது?

4. விநோபாவின் நெஞ்சில் நீங்காத இடம் பெற்ற அன்னையின் நன்மொழிகள் யாவை?

5. விநோபாவின் சிந்தனை வளர்ச்சிக்கு எவை உதவின?

6. விநோபா பரீட்சைக்கு முன்னர் யாது செய்தார்?

7. அவர் வீட்டைத் துறந்து சென்றது ஏன்?

8. விநோபா ஆசிரமத்தில் ஆற்றிய பணிகள் யாவை?

9. வேலூர்ச் சிறையில் இருந்தபோது, விநோபா செய்த தென்ன?

10. 'பூதான' இயக்கம் எங்ஙனம் தோன்றிற்று?

11. விநோபா பாவேயின் சிறப்பியல்புகள் யாவை?

**3. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக :**

வழிகாட்டி, வழக்கம், தோற்றம், வற்புறுத்தல், நிறுவப் பட்டது, மாற்றிக்கொள்.

**4. கட்டுரைப் பயிற்சி :**

1. விநோபாவின் இளமைப் பருவத்தைக் குறித்துப் பத்து வாக்கியங்கள் எழுதுக.

2. 'பூதான' இயக்கத்தின் பெருமையைப்பற்றிப் பத்து வரிகள் எழுதுக.

## இலக்கணம்

இரண்டு சொற்கள் சேர்ந்து வருவதைப் 'புணர்ச்சி' என்பர். முதலில் உள்ள சொல் 'நிலைமொழி' யென்றும், பின் உள்ள சொல் 'வருமொழி' யென்றும் கூறப்படும்.

கீழே சில புணர்ச்சிச் சொற்களைக் காண்க.

ஒன்று + நாள் = ஒரு நாள்
ஒன்று + உயிர் = ஓர் உயிர்

'ஒன்று' என்பது எண்ணுப் பெயர். ஒன்று என்னும் நிலைமொழி வருமொழியின் முதலில் உயிரெழுத்து வரும்போது 'ஓர்' என்றும், வேறு எழுத்துக்கள் வரும்போது 'ஒரு' என்றும் மாறும்.

இரண்டு + நாட்கள் = இரு நாட்கள்
இரண்டு + உயிர் = ஈருயிர்

'இரண்டு' என்னும் எண்ணுப் பெயரும் 'ஒன்று' என்னும் எண்ணுப் பெயரைப் போல் இரு, ஈர் என மாறி வந்தது.

முந்நூறு, மூவேந்தர்—'மூன்று' என்னும் எண்ணுப் பெயர் 'மு', 'மூ' என்னும் இருவகையாக மாறி நின்று வருமொழியோடு சேர்ந்தது.

நானூறு, நானிலம்—'நான்கு' என்பது 'நால்' என மாறிப் புணர்ந்தது.

ஐவகை, ஐம்புலன்—'ஐந்து' என்பதில் 'ஐ' மட்டுமே தங்கி நின்றது.

இவ்வாறே, அறுகால், எழு பிறப்பு, எண்ணூறு என்பனவற்றில் ஆறு, ஏழு, எட்டு என்னும் எண்ணுப் பெயர்கள் மாறி வந்துள்ளன.

# 8. விளையாட்டும் வினையும்

'விளையாட்டு' என்ற சொற்றொடரைக் கேட்டதும் மக்கள் உள்ளங்களில் ஒருவித மகிழ்வுணர்ச்சி பிறத்தல் இயல்பு. 'விளை' யென்றால் விளைந்த, விளைகின்ற, விளையும் என இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற முக்காலத்திற்கும் ஏற்பப் பொருள்படும். 'ஆட்டு' என்றால் அசைவு, அதாவது தொழில் என்பதாம். ஆகவே விளையாட்டு என்ற சொற்றொடர், பழங்கால முதல் பயன் விளைத்து வந்த ஆடல், தற்காலத்தும் பயன் விளைக்கின்ற ஆடல், வருங்காலத்தும் பயன் விளைக்கும்படியான ஆடல் என்ற கருத்தை விளக்குவதாகும்.

'வினை' யென்பது தொழில் எனப் பொருள்படும். ஒன்றினது தொழில்தான் அப் பொருளினது மேம்பட்ட சக்தியை வெளியிடும் சாதனமாகும். எங்ஙனமெனில் நாம் ஒன்றைச் செய்வதற்குமுன் அதைப் பற்றிய செய்திகளை நினைக்கிறோம்; பிறகு அதைப் பற்றிச் சொல்லுகிறோம்; பின் செய்கிறோம்; இவ்வாறு நிகழும் தன்மையைத்தான் 'திரிகரணச் செயல்' என்று கூறுவர். 'திரிகரணம்' என்றால் செயல் புரியும் மூன்று உறுப்புக்கள் என்று பொருளாகும். மனம், வாய், உடல் என்பனவே அம்மூன்று உறுப்புக்களாம். இம் மூவகை உறுப்புக்களின் செயல்களுக்கு ஓர் உதாரணம் காண்போம்: எளியவனொருவனை நாம் காண்பதாக வைத்துக் கொள்வோம்; அப்பொழுது அவன் வறுமை காரணமாக வாடி நிற்கும் நிலையை நம் மனத்தில் எண்ணு

கிறோம்; பின் அவனைப் பற்றிச் சில வினவு கிறோம்; அதன் பின்னர் நம்மாலான உதவியைச் செய்கிறோம். எனவே, நம் மனத்தில் தோன்றிய எண்ணமாகிய கரு சொல்லாக உருப்பெற்றுச் செயலாகப் பிறக்கிறது. அதனால்தான் அதனை **உண்மை** யென்றும், **வாய்மை** யென்றும், **மெய்ம்மை** யென்றும் சொல்லுகிறோம். இதனால் தொழிலின் உண்மை நிலை புலனாகிறதல்லவா?

> "சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
> சொல்லிய வண்ணம் செயல்,"

என்ற வள்ளுவர் வாக்கும் செயலின் உயர்வை விளக்க எழுந்ததேயாகும்.

இதுவரையில் விளையாட்டு, வினை என்பனவற்றைப் பற்றித் தனித்தனியே பிரித்தறிந்தீர்கள். இனி இவை யிரண்டினுக்குமுள்ள தொடர்பைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். விளையாட்டு தான் பிறகு வினையாக, அதாவது உண்மைச் செயலாக மாறுகிறது. எவ்வாறெனில், சில பிராணிகளும், விலங்குகளும், குழந்தைகளும் சிறு வயதில் விளையாடுகின்றன; அதனைப் பார்த்தால், அவ்விளையாட்டுகள் அவைகளின் பிற்கால வாழ்க்கை யென்னும் நாடகத்திற்கு முன்னேற்பாடாகச் செய்யும் ஒத்திகையென்று நாம் கருத வேண்டியிருக்கிறது.

பூனைக்குட்டி பாய்ந்து பாய்ந்து விளையாடு கிறது. நாய்க்குட்டி ஓடியும் ஆடியும், கந்தைத் துணி கிடைத்தால் கடித்துக் கிழித்தும் விளையாடு கிறது. குழந்தைகள் ஆணுயிருந்தால், அவை கடைவைத்து விற்பது, குதிரைச் சவாரி விடுவது, வண்டி ஓட்டுவது போன்ற விளையாடல்களை மேற்

கொள்கின்றன. பெண் குழந்தைகளாயின், அவை மணலைக் கோலி வீடாகக் கொண்டு, கொட்டங் கச்சி, தண்ணீர், மணல், சிறு செடிகளின் காய் முதலியவற்றைக் கொண்டு சோறு சமைப்பது, 'மரப்பாச்சி'களை வைத்துத் தாலாட்டுவது, குளிப் பாட்டுவது போன்ற விளையாடல்களை மேற்கொள் கின்றன. இவ்வித விளையாடல்களுக்கும் அவை களின் பிற்கால வாழ்க்கைக்கும் என்ன மாறுதல் இருக்கிறது? மேலும் அவைகளுக்கு வயதாக ஆக, அவைகளின் விளையாட்டும் சிறிது சிறிதாகக் குறைகிறது. அது ஏன்? அதுதான் விளையாட்டு 'வினை'யாக (வாழ்க்கையின் உண்மைச் செயலாக) மாறிவிடுகிறது என்பதை உணர்த்துவதாகும். இதனால் விளையாட்டிற்கும் வினைக்குமுள்ள தொடர்பு வெள்ளிடை மலையென விளங்குகிற தல்லவா?

வருங்கால வாழ்க்கைத் திட்டத்தை உருவாக்க வல்லது விளையாட்டு. மற்றும் அவ்விளையாட்டே, வாழ்க்கையென்னும் பாதையில் நடக்கும்போது எதிரில் தோன்றும் இன்பம், துன்பம் என்ற மேடு, பள்ளங்களைக் கடத்தற்குரிய மனவலிமையையும், உடல் உரத்தையும் அளிக்கிறது. அதனால் வாழ்க்கையின்பங்களை நுகர்வதற்கான நற்பயிற்சி ஏற்பட்டு விடுகிறது என்று கூறினால் அது மிகை யாகாது.

'**சுவரை வைத்தே சித்திரம் எழுதுக**' என்பது இந்நாட்டில் வழங்கும் ஓர் அரிய பழ மொழி. மனிதன் வாழ்க்கையை இனிதாக ஏற்று நடத்த, உடலை ஒழுங்காக வைத்துக் கொள்ள வேண்டும். அவ்வொழுங்கை அளிப்பது விளை

யாட்டேயாகும். மேலும், விளையாட்டினுல் மகிழ்ச்சி, அறிவு, வீரம் முதலிய சிறந்த தன்மைகளும் உண்டாகின்றன. இவ்விதமான விளையாட்டுகள் அவற்றின் பயன் நோக்கிப் பலவகையாகப் பிரிக்கப்படும்.

காகித மாடல், காய் தெறித்தல் முதலியன போன்று மகிழ்ச்சிக்காகவும் அறிவிற்காகவும் ஆடும் ஆடல்கள் ஒருவகை. இவ்வகையைவிடச் சிறந்த இன்னெருவகை யுண்டு. காடு மேடு திருத்தல், நீர் இறைத்தல், தோட்டப்பயிர் செய்தல் போன்ற விளையாடல்களே அவ்வகையைச் சேர்ந்தவை. இவ்விளையாட்டுகள் விளையாடும் போதே பயனுக மாறுவது இயல்பு. '**கம்புக்குக் களைவெட்டியது மாயிற்று, தம்பிக்குப் பெண் பாத்ததுமாயிற்று,**'' என்பதுபோல, இவ்வகை விளையாட்டுக்களால் பயன்பெறுதல் திண்ணம். இதனையே மனத்திற் கொண்ட திருவள்ளுவர்,

> **" விளையான் விளையாக்கிக் கோடல் நனைகவுள்**
> **யாளையால் யானையாத் தற்று,"**

என்று கூறியுள்ளார். "ஒரு காரியத்தைக் கொண்டு இன்னெரு காரியத்தை முடித்துக்கொள்வது, ஒரு யானையைக் கொண்டு மற்றெரு யானையைப் பிடித்தலேபோல் சிறப்புடையதாகும்,'' என்பது இக்குறளின் பொருளாம்.

பழங்கால விளையாட்டுகள் அக்கால மக்களின் வாழ்க்கை நிலைக்கேற்பவே அமைந்திருந்தன. ஒருவனே தனித்திருந்தும் ஆடலாம். அவை வில்வித்தை, யோகப் பயிற்சி ஆகியவை. இருவர் சேர்ந்து ஆடலாம்; குத்துச்சண்டை, சிலம்பம்

போன்றன அவை. பலர்கூடி ஆடலாம்; உப்புக் கோடு, பலிக்கோடு முதலியவையே அவை. அவ் விளையாட்டுகளை நோக்குங்கால் அவை தற்காப்பை உண்டுபண்ணுவனவாகவும், பெருமிதம் பயப்பன வாகவும், வீர உணர்ச்சியை ஊட்டுவனவாகவும் அமைந்து, அன்னாரின் வாழ்க்கைக்கு உறுதுணை யாயின. மேலும் விளையாடுவதற்குரிய கருவிகள் முதலிடம் அளிக்கப்படாமல், விளையாட்டுகளே முதலிடத்தைப் பெற்று விளங்கின.

தற்கால விளையாட்டுகளோ "**ஆள்பாதி ஆடம்பரம் பாதி**" என்றாற்போல் அமைந்துள் ளன. உதாரணமாகத் தட்டுப் பந்தாட்டத்தை எடுத்துக்கொள்வோம். அவ்வாட்டத்திற்குத் தட்டு, பந்து, ஏற்ற இடம், வரையறைக் கோடுகள், நீதிபதி, ஊதுகுழல், வலை, வாளி, சுண்ணும்புத் தூள், கயிறு, எலுமிச்சம்பழம், தண்ணீர், மற்றும் மாணவரின் மதிப்புக்குரிய பலவும் தேவைப்படு கின்றன.

முற்கால விளையாட்டுகளில் வெற்றி பெற் றோனை மதிப்பிடுதற்குரிய வெற்றிச் சின்னங்கள், விளையாடிய அவர்களாலேயே பெரும்பாலும் உண் டாக்கிக் கொள்ளப்பட்டன. அதாவது விளையாடும் பொழுது, தம் எதிரியினால் ஏற்பட்ட காயங் களும், வடுக்களுமே அவர்களுடைய வீரப்பதக்கங் களாகத் திகழ்ந்தன. தற்கால விளையாட்டுகளில் வெற்றி யுற்றோர்க்கு நன்மதிப்பிதழ்களும், வெள் ளிக் கோப்பைகளும், பொற் பதக்கங்களும் அளிக் கப்படுகின்றன. இவற்றை இதற்குரியவரான வெற்றி பெற்றாரேயன்றி, ஏனையோரும் தமதாகக் காட்டிக்கொள்ள முடியுமன்றோ! பழங்கால வெற்

றிச் சின்னங்களை, அவற்றிற்குரியவரன்றி ஏனை யோர் தமதாக்கிக்கொள்ள இடமில்லை.

பல நன்மைகள் காணப்படினும், பண்டைக் கால விளையாட்டுகளில் சில தீமைகளும் இல்லாம லில்லை. அவையாவன, தோல்வியுற்றோர் வெற்றி பெற்றோரைப் பொறாமையால் வேறுவகையில் துன்புறுத்துவது, கைகால் முறிவு முதலியன.

இனி விளையாட்டுகளின் அடிப்படை உண்மை களை ஓர் உதாரணத்தின் வாயிலாகக் காண்போம். கைப்பந்தாட்டாம் என்றொரு விளையாட்டு உண் டல்லவா! அவ்வாட்டத்திற்கு வேண்டுவனவும், அப்போது நிகழ்வனவும் எவையோ, அவையே வாழ்க்கைச் செயல்களாக மாறுவதை நாம் உணர வேண்டும்.

மேற்கூறிய விளையாட்டிற்குப் பண்பட்ட இடம் தேவை. இது வாழ்க்கையில் நாம் செய்யும் செயல்களுக்கு ஏற்ற இடத்தை ஆராயவேண்டும் என்னும் உண்மையை விளக்குகிறது. வரையறைக் கோடுகள், செய்யுஞ் செயல்களைத் தொடங்கும் காலம், முடிக்குங்காலம், அதற்கான கருவிகள், பொருள்கள் முதலியவற்றை வரையறை செய்து கொண்ட பின்பே தொடங்கவேண்டும் என்பதைப் போதிக்கிறது. பந்து, வாழ்க்கைக்கு ஏதாவது ஒரு செயலைத் தேர்ந்தெடுத்து, அதன் வாயிலாகச் சிறப்புற்று விளங்க வேண்டுமென்பதை அறிவிக் கின்றது. இவ்வாறே வலையானது வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களை வெற்றிகொள்ள வேண்டு மென்பதைச் சுட்டிக் காட்டுகிறது. இரு கட்சி யினர் இருத்தலானது வாழ்க்கையே ஒரு போட்டி யென்பதையும், ஒருவரைப் பார்த்து மற்றவர்

முன்னேற வேண்டுமென்பதையும் தெரிவிக்கிறது. பந்தைப் பரிசோதித்தல் என்பது செய்யும் செயலை எண்ணித் துணியவேண்டுமென்ற உண்மையைக் காட்டுகிறது.

பந்தைக் கணக்கின்றி இரு கட்சியினரும் தட்டுதல், தமக்கு நல்லதெனத் துணிந்த செயலாயினும் அது பிறருக்கும் நன்மை பயக்குமா என்பதைப் பலருடன் கூடி யாராய்தல் வேண்டும் என்பதை அறிவிக்கிறது. நடுவரை நியமித்தலானது, வாழ்க்கையில் தலைவரின் கூற்றைக் கேட்டு நடத்தல் வேண்டுமென்ற உண்மையைத் தெளிவுறக் காட்டுகிறது. ஆடலில் எதிர்க்கட்சியினர் எண்ணையும் சேர்த்து எண்ணுகிருர்கள் அல்லவா ? அது, நம்மைமட்டும் நாம் எண்ணுதல் ஆகாது என்ற அரிய கருத்தைப் புகட்டுகிறது. மும்முறை ஆடல் உண்டல்லவா? ஒரு செயலை மும்முறை ஆராய்தல் வேண்டுமென்பது அதன் படிப்பினை. இவ்வாறு ஏனைய நிகழ்ச்சிகளுக்கும் வாழ்க்கையோடு தொடர்பிருத்தலை நாம் காணக் கூடும்.

இதுகாறும் கூறியவற்ருல் விளையாட்டு என்பது பயன் கருதியே ஏற்பட்டதென்னும் உண்மையும், சிறு வயதில் ஆடும் விளையாடல்கள் எதிர் காலத்தில் வினையாக மாறுகின்றன என்ற கருத்தும் நன்கு வெளிப்படுகின்றன அல்லவா ?

### பயிற்சி

**1. பொருள் காண்க :**

சொற்ருெடர், ஏற்ப, திரிகரணச் செயல், கரு, வெள்ளிடை மலை, காய் தெறித்தல், யோகப் பயிற்சி, தட்டுப்பந்து, வடுக்கள், நன்மதிப்பிதழ், முறிவு, சிக்கல், கூற்று.

2. விடை கூறு :

1. 'விளையாட்டு' என்ற சொற்றொடரின் பொருள் யாது?

2. திரிகரணச் செயல் என்றால் என்ன?

3. 'வினை' எவ்வாறு பிறக்கிறது?

4. விளையாட்டிற்கும் வினைக்குமுள்ள தொடர்பை விளக்கும் நிகழ்ச்சிகள் யாவை?

5. விளையாட்டினால் உண்டாகும் நன்மைகள் யாவை?

6. விளையாடும்போதே அவை பயனாக மாறக்கூடிய விளையாட்டுகள் யாவை?

7. திருவள்ளுவர் 'வினை'யைப் பற்றி என்ன கூறியுள்ளார்?

8. பழங்கால விளையாட்டுகள் யாவை?

9. முற்கால விளையாட்டுகளுக்கும், இக்கால விளையாட்டுகளுக்கும் உள்ள வேற்றுமை என்ன?

10. கைப்பந் தாட்டத்திற்குத் தேவையான பொருள்களும் நிகழ்ச்சிகளும் யாவை? அவை எவ்வாறு வாழ்க்கைச் செயல்களாக மாறுகின்றன?

3. கட்டுரைப் பயிற்சி :

நீ ஆடும் ஒரு விளையாடலைப் பற்றிப் பத்து வாக்கியங்கள் எழுதுக.

## இலக்கணம்

1. நிலைமொழி இறுதியில் உயிர் வந்து, வருமொழி முதலில் க, ச, த, ப என்ற வல்லெழுத்துக்களில் ஏதுமொன்று வந்தால், வந்த எழுத்துப் பெரும்பாலும் மிகும்.

| | | |
|---|---|---|
| குதிரை | + சவாரி | = குதிரைச் சவாரி |
| குத்து | + சண்டை | = குத்துச் சண்டை |
| தட்டு | + பந்து | = தட்டுப் பந்து |

2. டு, று என்ற எழுத்துக்களில் முடியும் சொற்கள் வருமொழியோடு புணரும் போது இரட்டித்து வரும்.

| | | |
|---|---|---|
| வீடு | + தோட்டம் | = வீட்டுத் தோட்டம் |
| காடு | + வழி | = காட்டு வழி |
| சேறு | + குழி | = சேற்றுக்குழி |
| ஆறு | + நீர் | = ஆற்றுநீர் |

# செய்யுட் பகுதி

## I. வாழ்த்து

### 1. பரம்பொருள்

ஆத்தி சூடி இளம்பிறை அணிந்து
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்,
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசை கிடப்போன்,
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்,
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்து உணராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதன் இயல் ஒளி உறும் அறிவாம்;
அதன் நிலை கண்டார் அல்லலை அகற்றினர்;
அதன் அருள் வாழ்த்தி அமர வாழ்வு எய்துவோம்.

—பாரதியார்

### 2. இயேசுநாதர்

நூல்வாய்ப் புகழ்மேல் உயர்ந்தோய் நீ;
நோய்வாய் மருந்திற் கனிவோய் நீ;
கோல்வாய் கோடா நீதி நெறி
கொண்டெவ் வுலகும் புரந்தோய் நீ
வேல்வாய்க் குருதி பாய்ந் திறப்ப
மெய் கொண் டாயோ! இதை யறியாக்
கால்வாய் இலைபோல் தியங்கிய வென்
கருத்திற் குணர்வை உணர்த்தாயோ!

—வீரமாமுனிவர்

## 3. மகம்மது நபி

அரபிய நாட்டில் தோன்றி
ஆண்டவன் ஒருவன் என்னும்
மரபினை வாழச் செய்த
மகம்மது நபியே! போற்றி;
தரையினில் பொதுமை மல்கிச்
சகோதர நேயம் ஓங்கக்
கரவிலா மறையைத் தந்த
கருணையே போற்றி! போற்றி!

—திரு. வி. கலியாண சுந்தரனார்

# II. அறவுரை

## 1. நான்மணிக் கடிகை

### அழகு

நிலத்துக் கணிஎன்ப நெல்லும் கரும்பும் ;
குளத்துக் கணிஎன்ப தாமரை ; பெண்மை
நலத்துக் கணிஎன்ப நாணம் ; தனக்கணி
தான் செல் லுலகத் தறம். 1

### சிறந்தவை

கண்ணிற் சிறந்த உறுப்பில்லை ; கொண்டானின்
துன்னிய கேளிர் பிறர் இல்லை ; மக்களின்
ஒண்மையவாய்ச் சான்ற பொருள் இல்லை,
ஈன்றாளின்
எண்ணக் கடவுளு மில். 2

### சிறுமையிற் பெருமை

திரியழற் காணின் தொழுப ; விறகின்
எரியழற் காணின் இகழ்ப ;—ஒரு குடியில்
கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றான்
இளமைபா ராட்டும் உலகு. 2

—விளம்பிநாகனார்

## 2. ஆசாரக்கோவை

### ஆசாரவித்து

நன்றி அறிதல், பொறை யுடைமை, இன்
சொல்லோ(டு)
இன்னாத எவ்வுயிர்க்குஞ் செய்யாமை, கல்வி யோடு
ஒப்புர(வு) ஆற்ற அறிதல், அறிவுடைமை

நல்லினத் தாரோடு நட்டல் இவை யெட்டும்
சொல்லிய ஆசார வித்து. 1

### திறமிகுந்தவர் செய்கை

துன்பத்துள் துன்புற்று வாழ்தலும், இன்பத்துள்
இன்ப வகையான் ஒழுகலும்,—அன்பிற்
செறப்பட்டார் இல்லம் புகாமை இம் மூன்றும்
திறப்பட்டார் கண்ணே யுள. 2

### பிறரிடம் பேசும் முறை

விரைந்துரையார்; மேன்மேல்உரையார்; பொய்யாய
பரிந்துரையார் ; பாரித்(து) உரையார் ;—ஒருங்(கு)
எனைத்தும்
சில்லெழுத்தி னாலே பொருளடங்கக் காலத்தால்
சொல்லுக செவ்வி யறிந்து. 3

—பெருவாயின் முள்ளியார்

## 3. திருக்குறள்

### கடவுள் வாழ்த்து

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. 1

### வான் சிறப்பு

வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று. 2

### நீத்தார் பெருமை

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை எண்ணிக்கொண் டற்று. 3

### அறன் வலியுறுத்தல்

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல். 4

### இல்வாழ்க்கை

துறந்தார்க்கும் துவ்வாத வர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை. 5

### வாழ்க்கைத் துணை நலம்

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின், வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல். 6

### தந்தை செய் நன்மை

தந்தை மகற் காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல். 7

### அன்புடைமை

அன்பீனும் ஆர்வம் உடைமை; அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு. 8

### விருந்தோம்பல்

வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ; விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம். 9

### இனியவை கூறல்

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது? 10

# III. கதை

## 1. பஞ்சதந்திரப் பாடல்

### நண்டு கொக்கைக் கொன்ற கதை

மீனொன்றையு மேதின்றுடல் மிகவேவளர் கொக்கு
தானங்கொரு பானண்டுத னைக்கண்டிரை கொள்ள
ஞானந்தரு மோனங்கொடு நண்ணும்படி கண்டப்
பானண்டதை "நீ யிங்குறை பண்பேதுரை" யென்ன, 1

"என்னென்றுரை செய்வேனினி யானெங்ஙன முய்வேன்?
கொன்னுந்திய வலைகாரர்கள் கூடிக்குள மேறி
மன்னுந்தட மெல்லாமிக வளைத்தேவலை வீசிச்
சின்னஞ்சிறு பொடிமீன்முதற் சேரப்பிடித் தாரே. 2

"இந்தக்குள நாளைக்கென வெண்ணிக்கொடு போனார்
அந்தப்படி வந்தேபிடித் தவர்காவிலெ டுத்தே
சந்தைக்கடை தொறுமீன்கடை தானேயென விற்பார்
எந்தப்படி யிவர்தப்புவ தெனவெண்ணியி ருந்தேன். 3

"அந்தப்பழி காரர்வரு முனமேயொரு பாயஞ்
சிந்தித்தன னப்படி செய்தாலவை யுய்யும்
எந்தப்படி யானும் அழைத் திங்கே வரு வாயேல்
இந்தக்குளம் விட்டோர்குள மெய்தும்படி செய்வேன்." 4

என்றேபக ராசன் சொல
    இயல்நண்டதை நம்பிச்
சென்றேபல மீனோடுரை
    செயவே யவை கூடி
நன்றேயென வரவொவ்வொரு
    நடைக்கொன்று கொண்டேகிக்
கொன்றேசில தின்றேசில
    கொடும்பாறையி லுலர்த்தி, 5

அலவன் றசை தனையுண்டிட
வதையுங்கொடு செலவந்
நிலமெங்கணு, மீனென்புகள்
நிறைகொண்டது கண்டே,
" நலதிங்கிது பலமீனையும்
நனிதின்றது நமையுங்
கொலவந்தது நாமும் இது
கொலுமுன் கொலுவோமே. 6

" நம்மால்வரு பிழையேயிது
நாமும் அந்த மீன்போல்
சும்மாவிருந் தனமேற்கொலு
மதிலேயொரு சூழ்ச்சி
எம்மால் வகை வருமாறினிச்
செய்வே"மென வெண்ணி
அம்மாபகன் கழுத்தைக் கவை
யடியானெருக் கியதே. 7

நெருக்குண்டற வீழ்ந்தே கொக்கு
நீங்கிற்றுயிர் ; அலவன்
இருக்குந்தலம் ஏகித்தன(து)
இனத்தோடிருந் ததுவே ;
செருக்கும்பகை பெரிதாகிலும்
சில தந்திர வகையால்
முருக்கும்படி நினைத்தாலதின்
முடியாததும் உளதோ ? 8

—வீரமார்த்தாண்ட தேவர்

## 2. பாஞ்சாலி சபதம்

### விதுரன் தூது செல்லுதல்

அண்ணனிடம் விடைபெற்று விதுரன் சென்றான்
அடவிமலை ஆறெல்லாம் கடந்து போகித்
திண்ணமுறு தடந்தோளும் உளமும் கொண்டு
திருமலியப் பாண்டவர்தா மரசு செய்யும்
வண்ணமுயர் மணிநகரின் மருங்கு செல்வான்
வழியிடையந் நாட்டின் உறு வளங்கள் நோக்கி
எண்ணமுற லாகித்த னிதயத் துள்ளே
இனையபல மொழிகூறி இரங்கு வானால். 1

நீலமுடி தரித்த பல மலைசேர் நாடு
நீரமுத மெனப் பாய்ந்து நிரம்பு நாடு
கோலமுறு பயன்மரங்கள் செறிந்து வாழும்
குளிர் காவும் சோலைகளும் குலவு நாடு
ஞாலமெலாம் பசியின்றிக் காத்தல் வல்ல
நன்செய்யும் புன்செய்யும் நலமிக் கோங்கப்
பாலடையு நறுநெய்யுந் தேனுமுண்டு
பண்ணவர் போல் மக்களெலாம் பயிலு நாடு. 2

பேரறமும் பெருந் தொழிலும் பிறங்கு நாடு
பெண்களெல்லாம் அரம்பையர் போ லொளிரு நாடு
வீரமொடு மெய்ஞ்ஞானந் தவங்கள் கல்வி
வேள்வி எனுமிவை யெல்லாம் விளங்கு நாடு
சோரமுதற் புன்மை எதும் தோன்றா நாடு
தொல்லுலகின் முடிமணி போல் தோன்று நாடு
பாரதர்தந் நாட்டிலே நாச மெய்தப்
பாவியேன் துணைபுரியும் பான்மை என்னே! 3

—பாரதியார்

## 3. நைடதம்

### நளன் திருமணம்

இன்ன பேர் அணி யாவும் எழில் செயத்
துன்னி எங்கு முழவர் துவைத் திடப்
பொன்னஞ் சூழிப் புகர்முக வெற்பின் மேல்
மன்னர் மன்னன் மகிழ்ச்சியொ டேகினுன். 1

நேமி சூழ்ந்த நெடுநிலே மன்னவர்
தாம வெண்குடை தாங்கினர் பின்வர
வாம மேகலே மங்கையர் அங்கையிற்
காமர் செம்பொற் கவரி இரட்டவே. 2

தண்ணந் தாமரைத் தாக்கணங் கன்னவர்
கண்ணு நெஞ்சு முவந்து களிப்புற
எண்ணில் வேதியர் ஆசி இயம்பிட
வண்ண மாமணி மண்டபத் தெய்திஞன். 3

கள்ள ருமலர் நாற்றிளண் காவதம்
உள்ள கன்ற ஒளிர்மணி மாடத்தின்
பிள்ளே மான்நிகர் நோக்கியைப் பெய்கழல்
வள்ள லோடு மணத்தவி சேற்றிஞர். 4

உதக நல்குநல் லோரை இஃதென
விதியின் நாடிக் கணிதர்வி ளம்பலும்
பதலே ஆர்த்தெழப் பாவையை நல்கிய
மதும லர்த்தொடை மன்எழுந் தானரோ. 5

கமல மீதுசெங் காந்தள் அலர்ந்தெனக்
குமரன் அங்கையில் கோல்வளே செங்கை வைத்(து)
இமய மாதும் இறைவனும் போல வாழ்ந்(து)
அமைதிர் என்ன அரும்புனல் நல்கிஞன். 6

சாந்த மூழ்கு தடம்புயன் ஆரழற்
கேய்ந்த யாவும் இனிதுமு டித்தபின்
ஆய்ந்த நான்மறை யின்வழி ஆய்இழை
காந்தள் மெல்விரற் கைப்பிடித் தானரோ. 7

பொங்கு செந்தழல் சூழ்வந்து பூம்பொரி
செங்கை ஆரச் சொரிந்து திருமகள்
பங்க யப்பதம் பைம்பொனின் அம்மிவைத்(து)
அங்கண் வானத் தருந்ததி காட்டினன். 8

ஏனை உள்ளன யாவுமு டித்தபின்
மானின் நோக்கி ஓர் வல்லியின் ஒல்கிப்போய்த்
தானை அங்கடல் தாதைபொன் தாளினில்
தேன வாங்குழல் தேமலர் சூட்டினள். 9

சென்னி தாழ்ந்து வணங்கிய தேமொழி
மின்ன னாளை உவந்து விதர்ப்பர்கோன்
பொன்னந் தாமரைப் பூவையும் மாலும்போல்
மன்னர் கோனெடும் வாழ்கென வாழ்த்தினன். 10

—அதிவீரராம பாண்டியர்

# IV. பல்சுவைச் செய்யுட்கள்

## 1. திருவேங்கட சதகம்

மெய்யான புத்திபல சொல்லினும் தன்புத்தி
மேலாகி னேன் மூர்க்கனும்;
மிக்கபெரி யோர்களைத் தாழ்வுசெய் தற்பர்தமை
மேன்மை செய்வோன் மூடனும்;
செய்யாத காரியம தெனினும் பிடித்தபிடி
செய்யு மவ னே துட்டனும்
திரளான நன்றிபல செய்யினும் செய்தவர்க்(கு)
இடர்செய் பவன் பாதகன்;
ஐயாஎனப் பணிந்தாலுமே கோபம(து)
அடங்காதவன் குரூரன்
அனுதினம் தீமைபுரி வோனெந்த நாளிலும்
அடங்காத சண்டாளனும்
மையார் தடஞ்சோலை திகழ்கின்ற களமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறை அலர்மேலு மங்கை மணவாளனே!
வரதவேங் கடராயனே!

—மணவாள நாராயணன்

## 2. சிலேடைச் செய்யுள்

கல்லால் அடியுறலால், கண்மூன் றிருப்பதால்
எல்லோரும் பூசைக் கெடுத்திடலால்—வல்லோடு
கொள்ளுகையால், கங்கா குலமுத்துச் சாமிமன்ன!
கள்ளிதழி யான்நிகர்தேங் காய்.

—அழகிய சொக்கநாதப் புலவர்

## 3. இயற்கை எழிற்காட்சி

சூழ மேதி யிறங்கும் துறையில்
சொரியும் பாலைப் பருகிய வாளை
கூழை வாசப் பலாவினில் பாயக்
கூர்ம்ப லாக்கனி வாழையில் சாய
வாழை சாய்ந்தொரு தாழையில் தாக்க
வருவி ருந்துக் குபசரிப் பார்போல்
தாழை சோறிட வாழை குருத்திடும்
சந்திர சூடர்தென் னுரிய நாடே.

—திரிகூடராசப்பக் கவிராயர்

## 4. புதுவழியும் தவமும்

வள்ளுவரின் வாழ்க்கைதனை நினைப்பூட்டி
வான்புகழும் திருக்குறளை நடந்துகாட்டும்
கள்ளமிலாக் காந்திமுனி காட்டித்தந்த
கருணையொடு சத்தியத்தின் வீரம்சேர்ந்த
தெள்ளியநற் புதுவழியே உலகுக்கின்று
தேவைஎன்று தெளிந்தவர்கள் செப்புகின்றார்
தள்ளரிய அப்பெரிய தவத்தைத் தாங்கத்
தமிழர்கள்நாம் மிகமிகவும் தகுதி ஆவோம்.

—பாரதிதாசன்

## 5. உழவின் தேவை

ஏரும் இரண்டுளதாய் இல்லத்தே வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுமாய்—ஊரருகே
சென்று வரற்கெளிதாய்ச் செய்வாரும் சொற்கேட்கில்
என்றும் உழவே இனிது.

—ஔவையார்

# அருஞ்சொற்பொருள்

## 1. வாழ்த்து :

1. பரம்பொருள் - மேலான பொருள், கடவுள், மோனம் - மௌனம், வெண்மேனியான் - சிவபெருமான், பாற்கடல் மிசை கிடப்போன் - திருமால், மறையருள் புரிந்தோன் - அல்லா, ஏசுவின் தந்தை - பரம பிதா, பரவிடும் - வழிபடும், அமர வாழ்வு - அழியாத பெருவாழ்வு.

[இப்பாடலை இயற்றியவர் சுப்பிரமணிய பாரதியார் ஆவார். இவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த எட்டையபுரத்தில் பிறந்தவர். உணர்ச்சி யூட்டும் கருத்து மிக்க பாடல்களை இயற்றும் ஆற்றல் பெற்றிருந்த இக்கவிஞர் கி. பி. 1882-ல் தோன்றினர். 1921-ல் மறைந்தார்.]

2. மருந்தின் - மருந்தைப் போல், கோல் - செங்கோல், கோடா - வளையாத, புரந்தோய் - காத்தவனே, குருதி-இரத்தம். இறப்ப - இறப்பதற்காக, மெய் - உடல், கால் - காற்று, தியங்கிய - சுழன்ற.

[இப்பாடலைப் பாடியவர் இத்தாலி நாட்டில் பிறந்து, தமிழ் நாட்டில் வாழ்ந்த வீரமாமுனிவர் ஆவார். இவரது இயற்பெயர் ஜோஸப் பெஸ்கி என்பதாம். இவர் சிறந்த தமிழ்ப் புலவர். 'தேம்பாவணி' என்னும் இவரது நூலினுள் வரும் ஒரு செய்யுளே இது. இவரது காலம் 18-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி.]

3. மல்கி - பெருகி, கரவு - வஞ்சனை, மறை - குர் ஆன் என்னும் வேதம்.

[இச் செய்யுளை இயற்றிய ஆசிரியர் திரு. வி. கலியாண சுந்தரனாரின் வாழ்க்கை வரலாறு இப்புத்தகத்தின் முதற்பாடமாக அமைந்துள்ளது.]

## 2. அறவுரை :

**1. நாண்மணிக் கடிகை :**

1. அணி - அழகு, பெண்மை நலத்துக்கு - பெண் தன்மைக்குரிய 'கற்பு' என்னும் நன்மைக்கு.

2. துன்னிய - நெருங்கிய, கேளிர் - உறவினர், ஒண்மையவாய் - ஒளிவீசக் கூடியவையாய்.

3. தொழுப - தொழுவார்கள், காணின் - கண்டால், உலகு- உலகத்தில் வாழும் மக்கள்.

[இந்நூலின் ஆசிரியர் விளம்பி நாகனுர் என்னும் பெயருடைய கடைச்சங்க காலத்துப் புலவர் ஆவார். நான்கு இரத்தினக்கற்கள் புதைக்கப்பட்ட அணி, உடலுக்கு வனப்புத் தருவதுபோல, ஒவ்வொரு செய்யுளிலும் நான்கு நீதிகளைக் கொண்டு, இந்நூல் உலக வாழ்க்கைக்கு வனப்பு தருவதாகும். இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்ருகும்.]

**2. ஆசாரக்கோவை :**

1. பொறை - பொறுமை, இன்ஞத - தீய, ஒப்புரவு - உலக நடை. நட்டல் - சிநேகித்தல், ஆசாரவித்து - ஒழுக்கத்திற்கு அடிப்படையான தன்மைகள்.

2. ஒழுகல் - நடத்தல், செறப்பட்டார் - மாறுபட்டவர், திறப்பட்டார் - திறமையுடைய பெரியோர், இல்லம் - வீடு, புகாமை - செல்லாமை.

3. பாரித்து - விரித்து, சில்லெழுத்து - சில எழுத்துக்கள், செவ்வி - காலம், அழகு.

[இந்நூலை இயற்றிய ஆசிரியர் பெருவாயின் முள்ளியார் எனப்படுவார். இவர் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்தவர். பல வகையான சீரிய ஒழுக்கங்களை வரிசைப்படுத்திக் கூறும் நூலாதலின், இந்நூல் 'ஆசாரக் கோவை' என்று அழைக்கப்படலாயிற்று.]

8. திருக்குறள் :

1. இருள் - மயக்கம் (அறியாமை), இருவினை - நல்வினை, தீவினை என்பன. பொருள் சேர் - உண்மை பொருந்திய.

2. வான் - மழை, நின்று - நிலைபெற்று, அமிழ்தம் - அமுதம்.

3. துறந்தார் - முனிவர், துணைக்கூறின் - அளவுபடுத்திக் கூறினால், வையத்து - உலகத்தில்.

4. ஒல்லும் வகை - இயன்ற அளவு, அறவினை - அறச் செயல்களை, ஓவாது - இடைவிடாது.

5. துவ்வாதவர் - வறியவர், இல்வாழ்வான் - இல்லற நெறியில் இயைந்து வாழ்பவன்.

6. மனைமாட்சி - இல்லறத்திற்குத் தேவையான நற்குண நற்செய்கைகள், எனை மாட்சித்தாயினும் - எவ்வளவு சிறப் புடையதென்றாலும்.

7. ஆற்றும் - செய்யும், அவையத்து - கற்றறிந்தோர் கூடியுள்ள சபையில்.

8. ஆர்வம் - விருப்பம், நாடா - அறிவில்லாத.

9. மிச்சில் - மீதியான உணவு, மிசைவான் - உண்ணு வான், புலம் - பயிர் விளையும் நிலம்.

10. இனிது - இன்பம், ஈன்றல் - தருதல், வழங்குவது - கூறுவது, எவன் - என்ன காரணம் ?

[இந்நூலின் ஆசிரியர் திருவள்ளுவர் ஆவார். இவர் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த பெரும்புலவர். அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பெரும் பிரிவுகளை வகுத்து, அறிவுச் செல்வத்தை அளித்துள்ளார். இந்நூல் இரண்டடிகளைக் கொண்ட 1330 குறள்களை உடையது.]

## 3. கதை

**1. பஞ்சதந்திரப்பாடல் :**

1. மீன் ஒன்றையுமே - மீனை மட்டுமே, பண்பு - தன்மை.

2. கொன்னுந்திய - அச்சம் தருகிற, தடம் - குளம்.

3. காவு - தோள்சுமை, இவர் - இந்த மீன்கள்.

4. பழிகாரர் - கொலைக்கு அஞ்சாத மீன் பிடிப்போர், சிந்தித்தனன் - யோசித்தேன்.

5. பகராசன் - கொக்கின் அரசன், உரைசெய - சொல்ல, கொடும்பாறை - வளைந்த பாறை.

6. அலவன் - நண்டு, நனி - மிகவும்.

7. கவையடி - பிளவுபட்ட பாதம்.

8. அற - அற்றுவிழ, தலம் - இடம், ஏகி - சென்று, செருக்கும் பகை - வருத்தத்தோடு கூடிய பகை.

[இப்பாடல்களை இயற்றிய வீரமார்த்தாண்ட தேவர், ஐந்து உபாயங்களை வைத்துக் கதைப் பாடல்களை இயற்றியுள்ளார். நட்பின் பேறு, நட்புப் பிரித்தல், அடுத்துக் கெடுத்தல், பெற்றதை இழத்தல், ஆராயாது செய்தல் என்னும் ஐந்து பிரிவுகளுள் கதைப் பாடல்கள் அடங்கியுள்ளன.]

**2. பாஞ்சாலி சபதம் :**

1. அடவி - காடு, திண்ணமுறு - வலிமைகொண்ட, திரு - செல்வர், மருங்கு - அண்மையில், உறுவளம் - மிகுந்த செழிப்பு, இனைய - இவ்வாறுன.

2. கோலம்உறு - அழகு பொருந்திய, கா - நந்தவனம், பாலடை - பாலேடு, பண்ணவர் - தேவர்.

3. பிறங்கும் - விளங்குகின்ற, அரம்பையர் - தேவ மாதர், சோரம் - வஞ்சனை, புன்மை - இழிவு.

[பாரதத்தில் வரும் ஒரு பகுதியான இக் கதையைப் பாரதியார் சொன்னயமும், பொருள் நயமும் மிக, இந்நூலில் சித்திரித்துள்ளார்.]

8. நைடதம் :

1. துன்னி - நெருங்கி, முழவம் - மத்தளம், துவைத்திட - ஒலி செய்ய, சூழி - யானைமுகபடாம், புகர் முகம் வெற்பு - யானையாகிய மலை மீது.

2. நேமி - கடல், தாமம் - ஒளி, வாமம் - அழகு, காமர் - அழகு, கவரி இரட்ட - சாமரம் வீச.

3. தாக்கணங்கு-இலக்குமி, அன்னவர் - போன்ற மகளிர்.

4. தவிசு - ஆதனம், வள்ளல் - நளனாகிய வண்மையோன்.

5. உதகம் - நீர், ஓரை - முகூர்த்தம், கணிதர் - சோதிடர், பதலை - பறை (தம்பட்டம்), பாவை - தமயந்தி, நல்கிய - பெற்ற, தொடை - மாலை, மன் - வீம மன்னன்.

6. காந்தள் - செந்நிறமுள்ள ஒரு வகைப் பூ, இமய மாது - உமை, இறைவன் - சிவன்.

7. சாந்தம் - சந்தனம், தடம் புயன் - அகன்ற தோள்களையுடைய நளன்.

8. அருந்ததி - வசிட்டரின் மனைவி.

9. வல்லி - கொடி, தாதை - தந்தை, குழல் - கூந்தல்.

10. சென்னி - தலை, மின்னாள் - மின்னற் கொடி போன்ற தமயந்தி, தாமரைப் பூவை - தாமரை மலரில் வசிக்கின்ற இலக்குமி, மால் - திருமால்.

[இந்நூலின் ஆசிரியர் அதிவீராம பாண்டியர் என்பவர் ஆவார். நிடத நாட்டு மன்னனான நளனது கதையைக் கூறுவதால், 'நைடதம்' என்னும் பெயரை இந்நூல் பெற்றது. அதிவீரராம பாண்டியர் ஏறக்குறைய 400 ஆண்டுகளுக்கு முன், தென்பாண்டி நாட்டில் இருந்து அரசாண்ட மன்னர். இவரே வெற்றிவேற்கை முதலிய வேறு நூல்களையும் இயற்றியுள்ளார்.]

## 4. பல்சுவைச் செய்யுட்கள்

1. (சதகம் என்பது நூறு செய்யுட்களைக் கொண்டது). மெய் - உண்மை, அற்பர் - கீழோர், இடர் - துன்பம், மைஆர் - இருள் அடர்ந்த, தடம் - அகன்ற, அலர்மேல் மங்கை - தாமரை மலர் மேல் உள்ள இலக்குமி. வரத - வரம் அருள் செய்பவனே, ராயன் - தலைவன்.

2. கல்லால் அடியுறல் - தேங்காய் கல்லால் உடைக்கப் படுதல், (சாக்கியரால் சிவபெருமான் கல்லால் அடிபட்டது.) கள்ளிதழியான் - கொன்றைப் பூவை அணிந்த சிவபெருமான்.

3. மேதி - எருமை, துறை - நீர்த்துறை, சொரியும் - பொழியும், தாக்க - மோத, குருத்து - மெல்லிய கொழுந்து, சந்திர சூடர் - சந்திரனைத் தலையில் அணிந்த சிவபெருமான்.

4. கள்ளம் இலா - வஞ்சனையில்லாத, தள்ளரிய - விலக்க முடியாத, தெள்ளிய - தெளிந்த, தகுதி ஆவோம் - ஏற்றவ ராவோம்.

5. ஏர் - கலப்பை, இல்லம் - வீடு, வித்து - விதை.

203

# SENTHAMIL VACHAGAM

## FORM II—SPECIAL

BY

Pulavar K. K. MUTHIAH

*Senior Tamil Pandit,*
*St. Mary's High School, Dindigul.*

V. SUBRAMANIAM & CO.
EDUCATIONAL PUBLISHERS
DINDIGUL

*Copyright*]

[*Price* { *As.* 10 / *nP.* 62